பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை 04.04.2023 கதிர் 145

## இனி இது ரகசியம் அல்ல!

ராஜபக்சக்களின் குடும்பத்தில் கோட்டாபய அதிகாரத்துக்கு வந்ததைத் தொடர்ந்து அரசியலில் ஓய்வு நிலைக்குச் சென்றிருந்தார் மகிந்த ராஜபக்ச. வயது மூப்பின் காரணமாகவும் அந்த நேரத்தில் கோட்டாபயவுக்கு இருந்த ஆதரவு அலை காரணமாகவும் தவறு என்று தெரிந்த பலவற்றையும்கூட தட்டிக்கேட்கவோ, திருத்தவோ முடியாத ஒருவித அரசியல் துறவு நிலையில் அவர் இருந்தார் என்பது இந்தப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

அவருடனான பல நேரடிச் சந்திப்புக்களில் அதனை உணர முடிந்திருப்பதுகூட இங்கே விரிவாக இதற்கு முன்னர் எழுதப்பட்டிருக்கின்றது. அத்தகையதொரு நிலையிலேயே கோட்டாபயவின் ஆட்சியின் வீழ்ச்சிக்கான பிள்ளையார் சுழி மகிந்த ராஜபக்சவின் ஆதரவுக் கூட்டம் ஒன்றில் இருந்தே தொடங்கியது என்பதையும் மறந்துவிட முடியாது.

கோட்டாபய எடுத்த மோசமான தீர்மானங்களின் விளைவாக அவரது ஆட்சி புகழ் இழந்தபோது,

☞ 2

### கருநாட்டுக்கேணியில்

# தமிழர் காணிகளில் சிங்கள குடியேற்றம்

## பணிகளை விரைவுபடுத்தும் அதிகாரிகள்
## தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஏப்ரல் 04 (ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமமான கருநாட்டுக்கேணியில் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றம் ஒன்றினை ஏற்ப டுத்துவதற்கு முயற்சிமேற்கொள்ளப்படுவதாகக் குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

கருநாட்டுக்கேணிப் பகுதியில் பொலிஸ்நிலையத்தைச்சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய காணிகளே, இவ்வாறு அபகரிக்கப்பட்டு சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

☞ 2



## அனலைதீவு கடலில் கி 420 கஞ்சா சிக்கியது

(ந.லோகதயாளன்)

யாழப்பாணம் அனலைதீவு கடல் வழியாக இலங்கைக்குள் எடுத்து வரப்பட்ட 420 கிலோ கஞ்சா திங்கட்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து படகில் எடுத்து எடுத்து வந்த 420 கிலோ கஞ்சாவே திங்கட்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதோடு அதனை எடுத்து வந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சா காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டது..

இவை தொடர்பில் சட்ட நடவடிக்கைக்காக உட்படுத்தப்படவுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இருவரும் அனலைதீவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

### தமிழ் எம்.பிக்களின் அரங்கம்:

## மனோவின் யோசனைக்கு சித்தார்த்தன் பேராதரவு





உங்களுடைய தமிழ் நாடாளுமன்ற அரங்க முயற்சிக்கு எமது பங்களிப்பு என்றும் உள்ளது. இந்த முயற்சியை முன்னெடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியிடம் தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின்

☞ 2

## டெலிகொம்மை விற்க அனுமதிக்கமுடியாது தொழற்சங்கங்கள் திட்டவட்டமாக அறிவிப்பு

ஸ்ரீலங்கா டெலிக்கொம் நிறுவனம் நட்டமடைகின்ற நிறுவனம் அல்ல. அது இலாபமீட்டும் நிறுவனம். அதனை விற்பனை செய்வதற்கு இடமளிக்கவே முடியாது என்று தொழிற்சங்கங்கள் அழுத்தமாக அறிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா டெலிக்கொம்மின் ஊழியர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், அதன் பின்னர், அத்தொழிற்சங்கப் பிரதிநிதிகள் செய்தியாளர்களிடம் இதனை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தனர்.

இலங்கை அனைத்து தொலைத்தொடர்பு ஊழியர்கள் சங்கத்தின்தலைவர்ஜகத்குருசிங்க இது தொடர்பில் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா டெலிக்கொம் நட்டமடைகின்ற நிறுவனம் அல்ல. வருடமொன்றுக்கு பத்தாயிரம் மில்லியன் இலாபம் கிடைகின்றது. அதேபோன்று வரி உள்ளிட்ட விடயங்களில் அரசு 25ஆயிரம் மில்லியன் இலாபம் ஈட்டுகின்றது.

இவ்வாறான நிலையில் ஆட்சியாளர்கள்

☞ 2

## பல்கலைக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் மீது கொழும்பில் துரத்தித் துரத்தி நீர்தாரை தாக்குதல்

### மரனிய ஆணைக்குழுவினருடன் பேச நடந்துசென்றபோது அடக்குமுறை

பல்கலைக்கழக மாணவர்பல்கலைக்கழகமானியங்கள் ஆணை குழுவுக்கு பேச்சு நடத்துவதற்காக நடந்து சென்ற மாணவர் அமைப்புப் பிரதிநிதிகளைத் துரத்தித் துரத்தி நீர்த் தாரைத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆணைக்குழுவினருடன் பேச்சு நடத்தியே தீருவோம் என்று மாணவர்கள் விடாப்பிடியாகநின்றபோது அவர்கள் மீது பல சந்தர்ப்பங்களில் நீத் தாரைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அனைத்துப் பல்கலைக் கழகமாணவர்ஒன்றியத்தின் ஏற்பாட்டளர் வசந்த முதலிகே அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியத்தின் செயற்பாட்டாளர் கல்வெள சிறிதம்ம தேரர் உள்ளிட்ட மாணவர்கள் நேற்றையதினம் கலந்துரையாடலுக்காக இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச்சென்றனர்.

அவர்கள், களனி, ருகுணு, திறந்த பல்கலைக் கழகம், பாலி மற்றும் பௌத்த பல்கலைகழகம் என்பவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்

☞ 2

## மனோவின் முயற்சிக்கு செல்வமும் முழு ஆதரவு

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் என்ற உங்களது இந்த அபார முயற்சியைப் பாராட்டி வரவேற்பதுடன், எதிர்வரும் காலங்களில் உங்களுக்கு உறுதுணையாக உங்களுடன் சேர்ந்து பயணிப்பதற்கு நாங்களும் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்து நிற்கின்றோம்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின்

☞ 3

## ஆணைக்குழு தலைவரை நேரடியாக தலையிடக் கோரிக்கை விடுத்தேன்

### வசந்த முதலிகே தெரிவிப்பு

பல்கழகங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நேரடியாகத் தலையிடுமாறு பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவரிடத்தில் கோரியுள்ளேன் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவருடனான நேற்றைய கலந்துரையாடலின்

☞ 2

## மாணவர்கள் எப்போதும் என்னைச் சந்திக்கலாம்

### மானிய ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

என்னை சந்திப்பதற்கு தேவையான நேரத்திலும் வரலாம் என்று இலங்கை பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றி யம் மற்றும்

☞ 2

## செய்மதி பேசியுடன் இந்தியாவில் ஒருவர் நேற்றிரவு கைது



(ந.லோகதயாளன்)

தமிழ்நாடுஇராமேஸ்வரம் கடற்கரையில் செய்மதி தொலைபேசியுடன் நடமாடியவர் கைது செய்யப்பட்டார்.

இராமேஸவரம் பாம்பன் பகுதியில் திங்கட்கிழமை இரவு 8 மணியளவிலேயே பொலிஸார்

☞ 3

## வாகன விபத்துக்களில் எழுவர் பரிதாபச் சாவு

வெவ்வேறு இடங்களில் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் 7 பேர் சாவடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பில் ஹயஸ் வாகனமும் காரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் காரின் சாரதியான 49 வயதுடைய குடும்பஸ்தரும், காரின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த 28 வயதுடைய இளைஞரும் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தஹயஸ்வாகனத்தின் சாரதி நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடுகன்னாவ - ஹெனாவல பகுதியில் மோட்டார் சைக்கிளும் லொறியும் நேருக்கு நேர்

☞ 2

## அமைச்சுப் பதவி கிடைத்தால் விஜயதாசவிற்கு எல்லாம் மாறும்

### விமல் வீரவன்ச கடுமையான விமர்சனம்

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவுக்கு அமைச்சுப்பதவி கிடைத்தால் கறுப்பு வெள்ளையாகும். வெள்ளைகறுப்பாகும். அதனை வரலாறு முழுவதும் அவர் நிரூபித்துள்ளார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்றஉறுப்பினருமானவிமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

☞ 3

## பணம் கொடுத்து எம்.பிக்களை வாங்கும் தேவையே கிடையாது

### இப்படிச் சொல்கிறார் ஐ.தே.க. அமைப்பாளர்

பணம்கொடுத்துநாடாளுமன்ற உறுப்பினர்களை கொள்வனவு செய்ய வேண்டிய எந்தவொரு தேவையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகமாக சிறிகொத்தவில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐகக்கிய

☞ 2

## அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த 5 அம்சத் திட்டத்தை வைக்கிறார் கம்பன்பில



அரச வளங்களை தனியார் மயப்படுத்துவது தொடர்பில் ஐந்து நிபந்தனைகளை பின்பற்றவேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் தலைமையகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இந்த ஐந்து நிபந்தனைகளையும் வெளியிட்டார். அவரது நிபந்தனைகளாவன:

முதலாவதாக, அரச வளங்கள் தனியார் மயப்படுத்தப்படும்போது வெளிப்படைத்தன்மையைப் பேணும் முகமாக, , சர்வகட்சி நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவொன்று அமைக்கப்பட்டு அந்தக்

☞ 3

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்து மக்களின் கருத்தறியத் தயார்

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாராகவுள்ளனர் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாரம்பரிய முறையில் ஆட்சி நிர்வாகத்தினை முன்னெடுத்துச்

☞ 3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதனைச் சரி செய்வதற்காக தனது தமையனும், ராஜ பக்ச குடும்பத்தை அதி காரத்தின் உச்சிக்குத் தூக் கிச் சென்றவருமான மகிந் தவையேமுதல்பலிகொடுக்கத் துணிந்தார் கோட்டா. பிரதமர் பதவியில் இருந்து மகிந்தவை அகற்றுவதன் மூலம், மக்கள் மத்தியில் தனது ஆட்சிக்கு எதிராக எழுந்துவந்த சீற்றத்தையும் வெறுப்பையும் கட்டுப்படுத்தி விட முடியும், ராஜபக்சகுடும்ப ஆட்சி மீது அதிகரித்து வந்த கோபத்தைக்கட்டுப்படுத்திவிட முடியும் என்று கோட்டாபய கருதியிருக்கக்கூடும்.

அதற்கெதிரான வியூக மாக பிரதமர் பதவியில் இருந்துமகிந்த விலகுவதற்கு முன்னர் அவருக்கு ஆதரவு தெரிவிக்கஅலரிமாளிகையில் கூடிய கூட்டம், பின்னர் வெளியே வந்து காலி முகத் திடலில் போராட்டம் நடத்தி க்கொண்டிருந்தவர்களைத் தாக்கப் போய் அது பெரும் வன்முறையாக வெடித்து கோட்டபாயவையே ஓட ஓட விரட்டியது வரலாறு.

அண்ணனைப் பலி கொடுத்து ஆட்சியைக் காப் பாற்றிக்கொள்ள முயன்ற கோட்டா கடைசியில் தன் னையேபலிகொடுக்கவேண் டியதாகி விட்டது. போதாதற்கு தமது பரம வைரியான ஐக் கிய தேசியக் கட்சியிடம், அதுவும் அந்தக்கட்சி மிக மிக மோசமான அரசியல் நிலை யில் இருந்த சமயம் ஆட்சிப் பொறுப்பைக் கையளிக்க வேண்டியதாகியது.

இந்த மாற்றங்களுடன் கோட்டாவின்கைஅரசியலில் இருந்து ஒதுங்கிப்போக மீண்டும் மைய அரசியல் நீரோட்டத்துக்குவந்தார்மகிந்த ராஜபக்ச. பொதுஜன பெரமுன என்னும் மொட்டுக் கட்சியின் மீள் எழுச்சிக்கு அவரது அர சியல் விம்பம் அவசியமாக இருந்தது. அப்போதும் ம கிந்த அமைதியாகவே இருந் தார். மிக அண்மையில் தான் அவர் முழுமையான அரசியல் பணிக்குத் திரும் பியிருக்கிறார். வயோதி பத்தின் தொல்லைகளும் சிக்கல்களும் இருந்தாலும் தனக்குப் பின்னர் தனது குடும்பத்தினரின் அரசியல் இருப்புக்காக பெரமுனவை மீண்டும் பிரதான அரசியல் நீரோட்டத்தில் முன்னணியில் நிறுத்தவேண்டும்என்றுஅவர் நினைத்திருக்கக்கூடும்.

அதனாலேயே தீவிர அரசியல்பணிக்குத்திரும்பிய கையோடு அவர் தொடங்கி யிருக்கக்கூடிய பணி தனது பழைய கூட்டாளிகளை மீண்டும் தன்னோடு சேர்த் துக் கொள்வதற்கான நடவ டிக்கைகள்தான். விமல் வீரவன்ஸ, உதய கம்பன் பில போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு காலத் தில் மகிந்தவிற்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருந்தார்கள். இப்போதும்கூட ராஜபக்சகுடும்பத்தில்யாரைத் திட்டித்தீர்த்தாலும்மகிந்தவை மட்டும்அவர்கள்கண்ணியம ாகவேநடத்திவருகின்றார்கள். இந்தப்பரஸ்பரமரியாதையை வைத்தே விமல் வீரவன்ஸ, கம்பன்பில போன்றவர்க ளுக்குவலைவீசப்படுவதாகத் தகவல்.

பஸில் ராஜபக்சவை இந்த இருவருக்கும் தற் போது கண்ணில் காட்டக் கூடாது. அவரலாலேயே கோட் டாபயவின் பொன் னான ஆட்சிக் காலம் மண் ணாணது என்று அவர்கள் கருதுகின்றார்கள். அதேசம யம் பஸிலும் இவர்களின் அழுத்தத்துக்குப்பணியாமல் கட்சியை தனித்துவமாக எப்படிக் கொண்டு செல்வது என்பதில்கவனமாகஇருந்தார். இந்த நிலையில் பஸிலின் தலைமையில் இயங்கும் பெரமுனவின் பத்தரமுல்ல தலைமை அலுவலகத்தைத் தவிர்த்து மகிந்தவின் வீட்டை மையமாக வைத்துச் செயற் படத் தொடங்கியயிருக் கும் கட்சி வட்டாரங்கள், மகிந்த வையும் விமல் மற்றும் கம்பன்பிலவையும்மீண்டும் ஓரணிக்குள் கொண்டுவருவ தற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.

அவரர்கள் இருவரும் இப்போதைக்கு பெரமுன வோடு இணையவில்லை என்றாலும்ஆட்சியாளர்களின் திட்டங்களை அவர்கள் கண் மூடித்தனமாக எதிர்ப்பதைக் கட்டுப்படுத்துவதற்காவது இது பயனளிக்கும் என்கிற வகையில் இந்த நகர்வு மகிந்தவின் ஆசீர்வாதத்துடன் தொடங்கப்பட்டுள்ளன.

- இடிமின்னல் -

## தமிழர் காணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதியின் பிரத் தியேக செயலாளர் கீர்த்தி தென்னக்கோனின் வழி காட்டலில், மகாவலி அபி விருத்தி அதிகாரசபையி னாலேயே இந்த சிங்கள குடியேற்ற முயற்சி தற்போது மேற்கொள்ளப்பட்டு வரு கின்றதுஎன்றுவடக்குமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் குற்றஞ்சாட்டினார்.

சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ள தமிழ் மக்க ளின் காணிகளைப் பார்வையி டுவதற்கு,மகாவலிஅபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத் தர்கள், கரைதுறைப்பற்று பிரதேசசெயலக உத்தியே-ாகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தி யோகத்தர்கள் ஆகியோர் திங்கட்கிழமை கருநாட்டுக் கேணிப் பகுதிக்கு வருகைதந் திருந்தனர்.

கொக்குளாய் முகத்து வாரம் பகுதியில் தற்போது அத்துமீறிக் குடியிருக்கும் 341 சிங்களக் குடும்பங்களில் 181 குடும்பங்களிற்குஇப்பகுதியில் தலா 2 பரப்புக் காணி வீதம் வழங்கிஅதில்வீடுகள்அமைத் துக்கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந் தப் பணியைத் துரிதமாக முன்னெடுக்குமாறு ஜனாதி பதியின் செயலாளர் அதிகாரி களுக்கு அறிவுறுத்தல் வழங் கியதை அடுத்து பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

சிங்களக் குடியேற்றத்திற் காகத் தமிழ் மக்களின் காணி கள் ஆக்கிரமிப்புச் செய்யப் படுவதைத் தான் முற்றாக எதிர்க்கிறார் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவி கரன் தெரிவித்தார்.

சிங்களக் குடியேற்றத் திற்காக எடுக்கப்படும் காணிக ளுக்குரிய தமிழ் மக்களும் ஆட்சியாளர்களின் இந்தச் செயற்பாட்டை எதிர்ப்பதுடன் கடுமையாகக் கண்டிக் கின்றனர்.

1973, 1979 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட இக்காணிகளில் தாம் குடியிருந்ததுடன், பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபட்டுவந்ததாகவும்காணிக ளுக்குரிய தமிழ் மக்கள் தெரி வித்தனர்.

தமது காணிகளில் சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கமுடி யாதெனவும் அவர்கள் கூறுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தின் தமிழ் மக்களின் பூர் வீக எல்லைக்கிராமங்க ளான கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நீர்ப் பாசன வயல் நிலங்கள் ஏற்கனவே இவ்வாறு ஆக்கிர மிக்கப்பட்டு வெலிஓயா பகுதி சிங்கள மக்களுக்கு பகிர்ந் தளிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்குச்சொந்தமான மானாவாரி விவசாய நிலங் கள்பலவும்ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு பகிர்ந்த ளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளையும் அபகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றுரவிகரன்தெரிவிக்கிறார்.

"அங்கு சிங்களக்குடியேற் றங்களை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கை தமிழ் மக்களை மேலும் விசனம்கொள்ளச் செய்கின் றது" என்றார் அவர்.

## மனோவின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அரங்கம் ஒன்றை நாடாளு மன்றத்தில் அமைத்திடும் யோசனையை முன்னிறுத்தி தமிழ் முற்போக்குக் கூட்ட ணியின் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினனர் மனோ கணேசன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின்தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன், புளொட் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தர் மலிங்கம்சித்தார்த்தன்எம்.பி., தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாடாளு மன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோ ருக்கு மின்னஞ்சல் கடிதம் மூலம் அழைப்பு விடுத்தி ருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே புளொட் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

## பணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேசியக் கட்சி பணத்தைக் கொடுத்து ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை வாங்குதற்கு முயற்சிப்பதாக சஜித் பிரேமதாச தெரிவித் துள்ளார். அவ்வாறான எந்த தேவையும்எமக்குகிடையாது.

பணம் வழங்கி உறுப்பி னர்களை கொள்வு செய்யும் சம்பிரதானம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது. அதனை எமது கட்சியில் இருந்து சஜித் பிரேமதாச நன்கு அறிவார்.

ஆகவே அவர் அரசியல் உள்நோக்கத்தில்கருத்துக்களை தெரிவிப்பதை விடுத்து, அவரிடம் உரிய தரவுகள் சான்றுகள் இருந்தால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடத் தில்சென்று முறைப்பாட்டைச் செய்ய முடியும். அந்தச்செயற் பாட்டை மேற்கொள்ளுமாறு நான் அவரைக் கோருகின் றேன்.

அதுமட்டுமன்றி உறுப்பி னர்கள் சுதந்திரமாகச் சிந் திப்பதற்கு உரித்துடையவர் கள். அந்த வகையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நாட் டின் எதிர்காலத்துக்காகப் பொருத்தமான தருணத்தில் தீர்மானத்தை எடுப்பார்கள் என்று நம்புகின்றேன் - என் றார்.

## வாகன விபத்து ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மோதி விபத்துக்குள்ளாகி யுள்ளன.

இந்த விபத்தில் படுகாயம டைந்த 44 வயதுடைய மோட்டார் சைக்கிள் ஓட்டுந ரானகுடும்பஸ்தர்ஹெனாவல வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட பின்னர் உயிரிழந் துள்ளார்.

விபத்துதொடர்பில்லொறி யின் சாரதி கைது செய்யப்பட் டுள்ளார்.

தெனியாய பிரதேசத்தில் குறுக்கு வீதியொன்றில் மோட்டார் சைக்கிள் வீதி யை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளான தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

55 வயதுடைய குடும்பப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மொரட்டுவையில் தனி யார் பஸ்ஸும் மோட் டார் சைக்கிளும் மோதி விபத்துக் குள்ளாகியதில் இருவர் உயி ரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நண்பர்களான 24, 26 வயதுடைய இளை ஞர்களே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் தனி யார் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளத்தில்இருந்துசீதுவ நோக்கிச் சென்றுகொண்டி ருந்த ஓட்டோ ஒன்று மாரவில பகுதியில் லொறி ஒன்றுடன் மோதிவிபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் ஓட்டோ சாரதியான 34 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந் துள்ளார். அத்துடன் ஓட்டோ வில் பயணித்த சாரதியின் மனைவி மற்றும் 4, 7 வயது டைய இரு பிள்ளைகளும் படுகாயமடைந்த நிலையில் மாரவிலவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## டெலிகொம்மை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூறுகின்ற விடயங்கள் பற்றி மறுசீரமைப்பற்றநிலைமையே காணப்படுகின்றது. இந்த பின்னணியில்தரகுப்பணத்தி னைப் பெற்றுக்கொள்ளும் நோக்கதுடனேயே பெறுமதி யான இந்த நிறுவனத்தினை விற்பனை செய்ய முயற் சிக்கின்றனர்- என்றார்

இதேவேளை, இலங்கை அனைத்துதொலைத்தொடர்பு ஊழியர்கள் சங்கத்தின் மூத்த உபதலைவர் அதுலபோதேஜு, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, மற்றும் ராஜபக்ஷக் களுக்கு நாம் வெளிப்படை யான செய்தியை போராட்டத் தின்மூலம்அறிவித்துள்ளோம்.

அதேநேரம், நாம் டெலிக் கொம்மை விற் பனை செய்வதற்கு இடமளிக் கப்போவதில்லை என்பதை யும் மிகத்தெளிவாக மீண்டும் குறிப்பிடுகின்றோம். வஜிர அபேகுணவர்த்தன போன்று தரகுப்பணம் பெறும் காகங் கள் இந்த நிறுவனத்தினை கைப்பற்றுவதற்கு முயற் சிக்கின்றன.

அந்தச்செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்போவதில்லை என்று மிகத்தெளிவாகக் கூறு கின்றோம். நிலத்தின் அளவை மதிப்பிடாது பங் குகளை விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர். டெலிக் கொம்மை நியாயமான முறையில் விற்பனை செய் வதற்கு முயற்சிக்கவில்லை.

கடந்த தடவை இதனை விற்பனை செய்வதற்கு முயற்சிக்கப்பட்டது. அப் போது கூட நியமான முறை யொன்று காணப்பட்டது. ஆனால் இம்முறை அவ் வாறெல்லாம் இல்லாது தமக் குச் சார்ப்பானவர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

## பல்கலைக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வகையிலேயே இலங்கைப் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவை நோக்கிச் சென்றனர்.

லிப்ரன் சுற்றுவட்டத்தில் வீதிமறிப்புக்களைப் போட்ட பொலிஸார் மற்றும் கலகத் தடுப்பு பொலிஸார் ஆகியோர் அவர்களை திரும்பிச் செல் லுமாறு கோரினார்கள். முன்னோக்கிச் செல்வதற்கு இடமளிக்க முடியாது என்றும் கூறினார்.

அதற்கு மாணவர்கள் மறுத்ததோடு நடைபாதை யின் ஊடக நடந்து செல்வதற் குமா இந்த நாட்டில் தடை என்று கேள்வி எழுப்பினர்.

அத்துடன், நாங்கள் பிரச்சினைகளை ஏற்படுத்த வில்லை, வீதியை மூட வில்லை, கலகங்களை விளைவிக்கவில்லை, ஏன் எம்மை மறிக்கின்றீர்கள்? உங்களுடையஅதிகாரிகளான அமைச்சர் டிரான் மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் எம்மைத் தடுக்குமாறு உத் தரவு வழங்கியுள்ளார்களா என்றும்கேள்விதொடுத்தவாறு தடுப்புக்களை ஏற்படுத்திய பொலிஸரைக் கடந்து செல்ல முயன்றனர் அச்சமயத்தில் மாணவர்கள்மீதுநீர்த்தாரைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அப்போது மாணவர்கள் நகர மண்ணடபத்தினை நோக்கி ஓடினார்கள். அவர் களை பின்தொடர்ந்து நீர்த் தாரைத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. பின்னர் அவர்கள் நகர சபை மண்ட பத்துக்கு அருகில் ஒன்று கூடியதுடன் மீண்டும் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை நோக்கி நடக்கத் தொடங்கினர். அதன் போதும் மீண்டும் நீர்த் தாரை தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது. அதனை எதிர் கொண்ட மாணவர்கள் அங் கேயே நின்றனர். பின்னர் மெதுவாக முன்னோக்கி நகர்ந்தனர்.

நகர மண்டபத்தின் மறுபக்கத்தில் உள்ள அரச ஒசுசெலவுக்கு அருகில் வைத்து மீண்டும் அவர்கள் மீது நீர்த்தாரைத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் தொடர்ச்சியான நீர்த்தாரைத் தாக்குதலை எதிர்கொண்ட மாணவர்கள் தடைகளைத் தாண்டி நகர முயன்றபோது, பொலிஸார், கலந்துரையா டலுக்கு ஒருசிலரை மட்டுமே அனுப்பி வைக்க முடியும் என்று அறிவித்தனர்.

அதனை அடுத்து பொலி ஸார் உயர் பாதுகாப்பு வழங் கியதோடு வந்தமுதலிகே உள்ளிட்ட சிலர் மட்டும் பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் செல் வதற்கு அனுமதி வழங் கப்பட்டது. அதன் பின்னர் சுமார் அரைமணி நேரம் கலந்துரையாடல் நடை பெற்றிருந்தது.

## ஆணைக்குழ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு பல்கலைக்கழ கங்களில் காணப்படும் பிரச் சினைகள் தொடர்பில் தலை யீடுசெய்யும் பொறும்பும், அதி காரமும் உள்ளது.

நாடாளுமன்றத்துக்குவர முடியாத அகில விராஜ்காரிய வசம் மக்கள் ஆணையில் லாதபோதும் திருட்டு வழியில் கல்வி அமைச்சுக்குள் பிரவே சிக்கின்றார். இதனை நாம் அறிவோம். அவர் கல்வி அமைச்சுக்கு விரல் நீட்டு வதை நாம் வன்மையாகக் கண்டிருக்கின்றோம்.

அதனால் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கான நேர டியான தலையீட்டினை வழங்குமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கும் பல்கலைக்கழகத்தலைவருக் கும் நாம் நேரடியாகவே கூறுகின்றோம் - என்றார்.

## மாணவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியம் ஆகிய வற்றின்பிரதிநிதிகளைநேற்றுச் சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவரைச் சந்திப்பதற்குச் சென்றமாணவர்கள்மீதுநீர்த்தா ரைத்தாக்குதல் துரத்தித் துரத்தி மேற்கொள்ளப்பட்டமைகுறித்து அவரிடம் கேட்கப்பட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

(03ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

## மாணவர்கள் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேவையான நேரங்களில் என்னைச் சந்திப்பதற்கு வரமுடியும் என்று மாணவர்களுக்கு அறிவித்துள்ளேன். என்னைச் சந்திப்பதற்கு நூறு, இருநூறு பேர் வரவேண்டிய அவசியமில்லை. நான்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பில் இன்றும் (நேற்றும்) கலந்துரையாடப்பட்டது.

பல்கலைக்கழகப் பிரச்சினைகளை என்னால் தீர்க்க முடியும். ஆனால், சில பிரச்சினைகளை என்னால் தீர்க்க முடியாது. ஆகவே தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் எனது கவனத்திற்கு கொண்டு வந்தால் அதற்கான தலையீடுகளை என்னால் வழங்க முடியும்.

எனக்கு இன்றைய தினம் (நேற்று) வேறு பல பணிகளும் இருந்தன. நான் அவற்றுக்கு மத்தியில் மாணவர்களை சந்திப்பதற்கு வருமாறு கூறியதோடு பிரதான வாயிலை திறந்து வைக்குமாறும் அறிவித்திருந்தேன். அவர்களின் தொலைபேசி அழைப்புக்காகவும் காத்திருந்தேன். ஆனால் அவர்கள் வீதிக்கு இறங்கியதால் சில பிரச்சினைகள் நடந்துள்ளன - என்றார்.

## செய்மதி ....





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரைக் கைது செய்தனர்.

செய்மதி தொலைபேசி இந்தியாவில் தடை செய்யப்பட்ட நிலையில் இயங்கு நிலையிலான தொலைபேசியை சந்தேகநபர் வைத்திருந்தார் என்று இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர் இந்தியக் குடிமகன் என்கிறபோதும் அவர் வைத்திருந்த செய்மதி தொலைபேசி இலங்கைப் பிரஜை ஒருவருக்குச் சொந்தமானது என அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மறைத்து வைத்திருந்த சமயம பிடிக்கப்பட்ட இந்த தொலைபேசியுடன் கொழும்பை முகவரியாக கொண்டவரது அடையாள அட்டையும் நீதிமன்றகடிதமும் தமிழகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## மனோவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரங்கம் ஒன்றை நாடாளுமன்றத்தில் அமைத்திடும் யோசனையை முன்னிறுத்தி மனோ கணேசன், தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு மின்னஞ்சல் கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## அமைச்சுப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் அமுலுக்கு வந்தால் உண்மையான புலிப் பயங்கரவாதிகளுக்கு எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை. ஆனால் பயங்கரவாதிகள் அல்லாத சுதந்திரமான கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கு, சுதந்திர ஊடகங்களுக்கு பெரும் அச்சுறுத்தல். அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

கேள்வி:- நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக் குறித்த சட்டமூலத்தில் ஆபத்துக்கள் இல்லை என்றும் அவ்வாறு கருத்துவோர் நீதிமன்றத்தினை நாடலாம் என்று அறிவித்துள்ளார் அல்லவா?

பதில்:- விஜயதாச ராஜபக்ஷ வுக்கு அமைச்சுப் பதவி கிடைத்தால் கறுப்பு வெள்ளையாகும். வெள்ளை கறுப்பாகும். அதனை அவர் தனது அரசியல் வரலாறு முழுவதும் உறுதிப்படுத்தியுள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் சிறந்ததாக இருந்தால் சமூகத்தில் இவ்வாறானகுழப்பங்கள்ஏற்படாது. அந்தச்சட்டமூலத்தைநாடாளுமன்றத்துக்குள் தோல்வி அடை யச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. அது வெற்றியளிக்குமாஇல்லையா என்பது குறித்து இப்போது எதிர்வுகூறமுடியாது - என்றார்.

## அரச நிறுவன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவானது குறித்த தனியார் மயப்படுத்தப்படும் முறைமைக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

இரண்டாவதாக, பொது மக்களின் பணம் கொள்ளையடிக்கப்படாதிருக்கும் முறையாக உரிய சட்ட ஏற்பாடுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

மூன்றாவதாக, குறித்த நிறுவனம் தனியார் மயப் படுத்தப்பட்டதன் பின்னர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்காது செயற்படுவதை ஆட்சியாளர்கள் உறுதிசெய்யவேண்டும்.

நான்காவதாக, பொது மக்களின் அவசரத் தேவைகளுக்கு உதவும் நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதை தவிர்ப்பதோடு, போட்டித் தன்மையை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கை களை முன்னெடுத்தல்வேண்டும்.

ஐந்தாவதாக, ஆட்சியாளர்கள் ஒரு மூலோபாயமாக பகுதியளவிலாவது அந்த நிறுவனங்களில் தமது முகாமையை வைத்திருத்தல்வேண்டும் - என்றார்.

## புதிய பயங்கர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லமுடியாது. அவ்வாறான நிர்வாகத்தினை முன்னெடுக்கும் பட்சத்தில் எவ்விதமான தீர்மானங்களையும் எடுக்க முடியாது. ஆகவே, பின்னடைவுகளைப் போக்குவதற்கு சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு சட்டங்களில் திருத்தங்களைச் செய்கின்றபோது அதற்கு எதிர்ப்புக்கள் எழுக்கின்றன.

சட்டமூலம் பொதுப்படையாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சில விடங்கள் தொடர்பில் பரிந்துரைகள் காணப்பட்டால் அவற்றை மாற்றி அமைக்க முடியும். அதற்காக ஒட்டுமொத்தமாக சட்டமூலத்தினையே கைவிட முடியாது.

அதுமட்டுமன்றி, பெரும்பான்மையானவர்களின் கருத்துக்களை மூழ்கடித்து தனியொருவரின் கருத்தினை முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஆகவே பெரும்பான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆட்சி என்ற வகையில் நாம் பொதுமக்களின் கருத்துக்களுக்கு செவி சாய்பதற்கு தயாராகவே உள்ளோம் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

# மாணவர்களின் கல்விக்குத் தடையேற்படுத்த முடியாதாம்; உரியவர்கள் பொறுப்பை நிறைவேற்றாவிடின் நடவடிக்கை

### வடக்கு ஆளுநர் ஜீவன் அதிரடி

வட மாகாணத்தில் உள்ள முல்லைத்தீவு வலயப் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை அரச பஸ்கள் தொடர்ச்சியாக ஏற்றாது செல்வது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு வலயத்துக்கு உட்பட்ட ஏ - 9 வீதியில் அமைந்துள்ள பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் ஏற்றாது செல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மாணவர்களின் கற்பதற்கான உரிமையைப் பறிப்பதற்கோ அல்லது தடைகளை ஏற்படுத்துவதற்கோ துணை நிற்பதை அனுமதிக்க முடியாது.

ஏ9 வீதியில் பயணிக்கும் அரச பஸ்கள் மாணவர்களை ஏற்கனவே செல்வது தொடர்பில் எனக்கு முறைப்பாடுகள் கிடைத்த நிலையில் உரிய தரப்பினர்களை நடவடிக்கை எடுக்கப் பணித்துள்ளேன்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகமும் மேற்படி விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைத் தடையின்றி மேற்கொள்வதற்கு வடமாகாண கல்வி அமைச்சர் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் வடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ஆகியன தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஆகவே, மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்காமல் இருப்பதற்கு உரிய தரப்பினர் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படாவிட்டால் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மருத்துவ அதிகாரிகள் சங்கமும் எதிர்ப்பு

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக தொழிற்சங்கங்கள் ஆராயவுள்ளன.

சிவில் சமூகத்தினர் தொழிற்சங்கங்கள் உட்பட பல அமைப்புகள் உத்தேச பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாகக் கரிசனை வெளியிட்டுள்ள நிலையிலேயே தொழிற்சங்கங்கள் பயங்கரவாத தடைச்சட்டத் துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று ஆராய்ந்துள்ளன.

இலங்கை அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டது என அதன் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உத்தேச பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளதாக தெரிவித்துள்ள அதன் பேச்சாளர் அந்த குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாக வைத்து உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய சட்டமூலம் மற்றும் அதன் நியாயபூர்வ தன்மை தொடர்பாக ஆராய்வதற்காக மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ள அவர், உத்தேச சட்டமூலம் குறித்த எங்கள் அதிருப்தியை சுட்டிக்காட்டி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெளியே விவாதிக்கப்படவேண்டும்

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பன்னாட்டு மனித உரிமைகள் சட்டங்களிற்கு ஏற்ற விதத்தில் காணப் படவேண்டும்என்றுபன்னாட்டுமன்னிப்புச்சபை(அம்னஸ்டி இன்ரநானல்)வலியுறுத்தியுள்ளது. இலங்கைக்குவருகை தந்துள்ள அந்த அமைப்பின் டெப்புரோஸ் முச்சேனா தலைமையிலான குழுவினர் இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் பேச்சு நடத்திய பின்னர் தமது இந்த அவதானிப்பை விடுத்திருந்தனர்.

மன்னிப்புச் சபை மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா போன்றவையும் இதே கருத்தையே கடந்த காலங்களில் வெளிப்படையாகத் தெரிவித்து வந்திருக்கின்றன. இலங்கையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்தப் பன்னாட்டுச் சட்ட நியமங்களுக்கு ஏற்ப இல்லை என்பதனாலேயே அது நீக்கப்படவேண்டும் என்று இந்தத் தரப்புக்கள் நீண்ட காலமாக ஒரு கோரிக்கையாக அல்லது நிபந்தனையாக வலியுறுத்தி வந்திருக்கின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தனிநபர் உரிமைகளை மிக மோசமாக மீறும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத, சாதாரணமாகக் கைதி ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய உரிமைகளைத்தானும் மறுக்கக்கூடிய மிக மோசமான சட்டமாக இருப்பதன் காரணமாகவே அது நீக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால், ஆட்சியாளர்களோ அந்தச் சட்டத்தை நீக்கிவிட்டு அதைவிடப் பயங்கரமான, மோசமான, பலமடங்கு பாராதூரமான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறார்கள்.

அந்தச் சட்டம் எந்தளவிற்கு மோசமானது என்றால், முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டத்தை எதிர்ப்பவர்கள் எல்லோருமே பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடஇருப்பவர்கள்தான் என்று நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச கூறுமளவிற்கு பயங்கரமானது. இலங்கையின் அரசமைப்பு உறுதிப்படுத்தும் அடிப்படைய உரிமையான கருத்துக்கூறும் சுதந்திரத்தையே மறுதலித்து அவ்வாறு கருத்துக் கூறுவோர் எல்லோரையும் பயங்கரவாதிகள் என விழிக்கவைக்கும் வகையில் மோசமான சமிக்ஞைகளையே இந்தச் சட்டமூலம் வழங்குகின்றது.

நாடாளுமன்றத்திற்கு உள்ளும் புறமுமாக இந்தச் சட்டமூலம் தொடர்பில் கருத்துக்கள் பெறப்பட்டே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். அதேநேரத்தில் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சியில் வன்முறையில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துவதற்கு இதுபோன்ற சட்டம் தேவையாக இருக்கின்றது என்றும் அவர் கூறுகின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்தின் எதிர்பார்ப்பு என்ன என்பது ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியாததல்ல. ஆனாலும் புதிய சட்டமூலத்துக்கு அவர் அனுமதியளித்திருப்பதன் பின்னணியில் தனது ஆட்சியைத் தக்கவைக்கும், அதிகாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் அவரது அற்ப ஆசை வெளிப்பட்டுள்ளது.

அவர் சொல்வதைப் போன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே ஏற்கனவே அனைத்துத் தரப்புக்களும் கட்சி வேறுபாடின்றி இந்தச் சட்டமூலத்தை எதிர்க்கின்றன. ஆனால், நாடாளுமன்றத்திற்குள்ளே பெரும்பான்மைப் பலத்தை ஆளும் தரப்புக் கொண்டிருக்கும் காரணத்தால், அது சட்டம் ஆவது தடுக்கப்பட முடியாதது. நாடாளுமன்றப் பெரும்பான்மை ஒன்றை மட்டும் வைத்து இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவது பன்னாட்டுச் சமூகத்தையும் ஏமாற்றும் வெறுக்கத்தகக்க செயலாகவே அமையும்.

எனவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் போதிய விவாதமும் அதனைத் திருத்துவதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டதற்குப் பின்னரே அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

# அரசுக்கு எதிரான சகல எதிர்ப்புகளும் உத்தேச சட்டத்தில் பயங்கரவாதமே

## லால் விஜயநாயக்க எச்சரிக்கை



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புத் தடைச் சட்டமூலம் இலங்கை அரசியல் மற்றும் நாடாளுமன்ற வரலாற்றில் பாரதூரமான சட்டமூலமாகக் கருதப்படுகிறது. அரசாங்கத்தின் விருப்பத்திற்கு அமைய செயற்படஇடமளிக்கமுடியாது.

இந்தச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் அரசாங்கத்துக்கு எதிராக சகல எதிர்ப்புக்களும் பயங்கரவாத செயற்பாடாக கருதப்படும் என ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் லால் விஜயநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாட்டின் ஜனநாயகம் கவலைக்குரியதாக உள்ளது. மக்களின் அடிப்படை உரிமைகள், ஜனநாயகத்தைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளோம்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேசபயங்கரவாத எதிர்ப்புதடைச்சட்டம் இலங்கை அரசியல் மற்றும் நாடாளுமன்ற வரலாற்றில் பாரதூரமான சட்டமூலமாகக் கருதப் படுகிறது.

1979 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயங்கரவா தத் தடைச்சட்டம் யுத்த சூழல் பின்னணியில் உருவாக்கப்பட்டது. இந்த சட்டத்தில் ஜனநாயகத்தில் பாரதூரமான விடயங்கள் காணப்பட்டாலும் மக்கள் அப்போதைய சூழலைக் கருத்திற் கொண்டு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தி;ல் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிரான எதிர்ப்புகள் வலுப்பெற்றன.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் பயங்கரவாதத்தடைச்சட்டம் இரத்து செய்யப்படும் என 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கின.

உலக நடப்புக்கு அமைய பயங்கரவாதத் தடைச்சட்டம் இரத்து செய்யப்படும் என எதிர்பார்த்த சூழலில் தான் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புத் தடைச்சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்கும் பல விடயங்களை உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டமூலம் கொண்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் பொலிஸாரின் விருப்பத்துக்கு அடிப்படையில் ஒருவரைக் கைது செய்து, நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தாமல் தொடர்ந்து தடுப்பு காவலில் வைக்க முடியும்.

பயங்கரவாதம்என்பதற்கு விரிவான வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் அரசாங்கத்துக்கு எதிரான சகல செயற்பாடுகளையும் பயங்கரவாதம் என்று அடையாளப்படுத்த முடியும். தொழிலாளர்களின் அடிப்படை தொழில் உரிமைகள் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும்.

நாட்டுமக்களின்அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு உயர்நீதிமன்றத்துக்கு உண்டு. ஆகவே இந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் உயர் நீதிமன்றத்தை நாடுவோம். அரசாங்கத்தின் விருப்பத்திற்கு அமைய செயற்பட இடமளிக்க முடியாது. - என்றார்.

# 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கை கண்ணிவெடிகள் அற்ற நாடாக மாறும்

கண்ணிவெடி அகற்றும் இலங்கையின் இறுதி மூலோபாய ஒழுங்கமைப்பைவெளிப்படுத்திள்ளது. அதன்படி, 2027 ஆம் ஆண்டு இறுதிக்குள் நாட்டைகண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான திட்டங்கள்வகுக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனைக்கு அமைய கண்ணிவெடிகளை அகற்றும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்படி, இலங்கையில் கண்ணிவெடி அகற்றுவதற்கான இறுதி மூலோபாய ஒழுங்கமைப்புத் திட்டத்தை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா தலைமையில் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தவேலைத்திட்டத்துக்கு கலந்துகொண்ட தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் இந்நாட்டில் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான திட்டம் அமைச்சின் செயலாளரால் முன்வைக்கப்பட்டது. ஜெனிவா சர்வதேச மனிதநேய கற்றலுக்கான கண்ணிவெடி அகற்றும் நிலையத்தின் ஆதரவுடன் தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், நாட்டை கண்ணிவெடிகளில் இருந்து விடுவிக்க தேசிய மற்றும் சர்வதேச பங்காளரர்களுடன் நெருக்கமாக பணியாற்ற இருப்பதாக அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

2002 ஆம் ஆண்டு முதல், கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நாட்டில் இயங்கி வருகின்றதுடன், 2010 ஆம் ஆண்டு 'தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையம்' ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கிய இந்த நிலையம், தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவின் கீழ் செயற்படுகின்றது. இது கண்ணிவெடி அகற் றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வழிநடத்துவதோடு கண்காணிக்கிறது.

இலங்கை இராணுவம் நாட்டில் கண்ணிவெடி அகற்றும்நடவடிக்கைகளுக்குநேரடி பங்களிப்பை வழங்குவதோடு அது இலங்கை இராணுவத்தின்மனிதநேயகண்ணிவெடி அகற்றும் அலகுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது.

அதுமட்டுமின்றி, இரண்டு சர்வதேச அரச சார் பற்ற நிறுவனங்களும் இரண்டு உள்ளூர் அரச சார் பற்ற நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நாட்டில் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் பிரிவுக்கு அரசாங்கம் நிதி உதவி வழங்குகிறது.


மற்ற 4 அரசு சாரா நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் 17.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்த திட்டத்துக்கு ஆதரவை வழங்கும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து வழங்கப்படுகிறது.

இதுவரை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 204 சதுர கிலோமீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இருந்து ஆளணிக்கு எதிரான கண்ணிவெடிகள்அகற்றப்பட்டு பொதுமக்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன. 'தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தின்படி', கிட்டத்தட்ட 15 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட உள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) டபிள்யூ. எம். ஆனந்த, ஜெனிவா சர்வதேச மனிதநேய கற்றலுக்கான கண்ணிவெடி அகற்றும் மையத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ஓசா மஸ்லிபெர்க், தேசியகண்ணிவெடிஅகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் வீ. பிரேமச்சந்திரன், இலங்கை இராணுவத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அலகின் தலைவர் மேஜர் ஜெனரல் எம்.கே. ஜயவர்தன, பிரதம அதிகாரி (2) மேஜர் ரஜித அம்பலன்பிட்டிய உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# எல்லோருடனும் கலந்துரையாடிய பின்தான் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பற்றி முடிவு

## இப்படிக் கூறுகின்றார் அரசுத் தலைவர்



இது சர்வாதிகார அரசு அல்ல. நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் அனைத்துத்தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர் தான் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்பு வெளியிடப்படுவது தொடர்பில் ஜனாதிபதி கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு இம்மாதம் நாடாளுமன் றத்தில் முன்வைக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது. சட்டவரைவு சபையில் முன்வைக்கப்படுவதற்கு முன்னரே அது பேராபத்து என்று எதிர்க்கட்சியினரும் அவர்களின் ஆதரவாளர்களும் துள்ளிக்குதிக்கின்றனர்.

முதலில் சட்டவரைவு முன்வைக்கப்பட்டபின்னர்அதிலுள்ளபரிந்துரைகளைப்பார்க்க வேண்டும். அதன்பின்னர் விமர்சனங்களைமுன்வைக்க வேண்டும்.

அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர்தான் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்படும்.

இதன் ஊடாக மக்களை அடக்குவது அரசின் நோக்கம் அல்ல. ஆனால், கிளர்ச்சியாளர்கள் வெறியாட்டம் போட நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். நாட்டின் தேசிய பாதுகாப்புமிக முக்கியமானது. அதைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் செயற்பட எவருக்கும் அனுமதி இல்லை - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# முடிந்தால் ஒருவரையேனும் இணைத்துக்கொள்ளுங்கள்

## சஜித் அரசுக்கு சவால்



சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அரசாங்கத்திற்குச் செல்வதாக போலிச் செய்திகளை உருவாக்கி நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியைபிளவுபடுத்தும்சதித்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் பணத்திற்காக தமது சுயமரியாதையைத் தாரைவார்க்க மாட்டார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கடுவளை ரணால பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அரசாங்கத்திற்குச் செல்வதாக போலிச் செய்திகளை உருவாக்கி நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக் தியை பிளவுபடுத்தும் சதித்திட்டத்தைஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார்.

நாட்டைக்கட்டியெழுப்புவதற்கு பணமில்லாத இந்த அரசாங்கம், அரசாங்கத்தின் பக்கம் இணைத்துக்கொள்வதற்குஎதிர்க்கட்சிஉறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து முயற்சித்தாலும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பணமில்லாமல் எதிர்க்கட்சியுடன் இணைய தயாராக உள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் பணத்திற்காக தமது சுயமரியாதையை தாரைவார்க்க மாட்டார்கள்.

2020 ஆம் ஆண்டு 6 மாத கால வயதான ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு 54 ஆசனங்களை வழங்கி தேர்தல் வரலாற்றில் சாதனை படைக்க இந்நாட்டு மக்கள் உதவினார்கள். எனவே 2 ஆயிரம் லட்சம் அல்ல, அதற்கு மேல் கொடுத்தாலும், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சலுகைகளுக்காகவோ வரப்பிரசாதங்களுக்காகவோ தங்கள் சுயமரியாதையை இழக்க மாட்டார்கள். மக்களுக்கு ஒருபோதும் துரோகம் இழைக்கமாட்டார்கள். முடிந்தால் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரை தன் பக்கம்இணைத்துக்கொள்ளுங்கள் பார்ப்போம் என தான் அரசாங்கத்துக்கு சவால் விடுகின்றேன். இவ்வாறு மக்களுக்கு துரோகம் இழைக்கும்நாடாளுமன்றஉறுப்பினர்கள் எவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை.

இவ்வாறு அரசாங்கத்தின் பக்கம் இணைத்துக் கொள்வதற்கு பணமாக கறுப்புப் பணமும், பண்டோரா பத்திர பணமுமே பயன்படுத்தப்படுகிறது. இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் சகல பக்கத்தாலும் மக்களைத் துரத்தித் துரத்தி தாக்கி வருகிறது. மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலமும்,வரிகளை அதிகரிப்பதன் மூலமும்,வட்டி வீதத்தை அதிகரிப்பதன் மூலமும் மக்கள் நசுக்கப்படுகிறார்கள்.

அதுமட்டுமன்றிஅரசமைப்பை மீறி தேர்தலை சீர்குலைத்து வருகிறது. அதையும் தாண்டி,புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வந்து தொழிற்சங்க தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்களையும் சாதாரண மக்களையும் பயங்கரவாதிகள் என்றுமுத்திரை குத்த முயற்சிக்கின்றது.

அப்படியானால் கோத்தாபய ராஜபக்ஷவை துரத்துவதற்கு வீதிக்கிறங்கிய இலட்சக்கணக்கான மக்களை பயங்கரவாதிகள் எனத் தெரிவித்து சிறையில் அடைக்க முடியும். இதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை. - என்றார்.

## மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரமுயர்த்த வர்த்தமானி உடன் வெளியிடுக!

### பிரதமருக்கு செல்வம் எம்.பி. அவசர கடிதம்

மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கு நேற்று(திங்கட்கிழமை) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மன்னார் நகர சபையை மாநகரசபையாகதரம்உயர்த்துவது தொடர்பில் அமைச்சரவையில் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

எனினும், இன்னும் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவில்லை என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

எனவே, விரைவில் மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஈஸ்டர் தாக்குதல்களில் சகோதரங்களை இழந்தவர் உதட்டுப்பிளவு சத்திரசிகிச்சைகளுக்கு உதவிக்கரம்

கொழும்பு, ஏப். 04

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தனது சகோதரங்களை இழந்த நபர் ஒருவர் இலங்கை யில் உதட்டுபிளவு சத்திர சிகிச்சகளுக்கு உதவுவதற்கு முன் வந்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தனது சகோதரங்களை இழந்த டேவிட் லின்சே என்பவரே இலங்கையில் உதட்டுபிளவு சத்திர சிகிச்சைகளுக்கு உதவ முன் வந்துள்ளார்.

அமெலிடானியல்லின்சே மன்றத்தை அமைத்துள்ள டேவிட்லின்சே இலங்கையில் உதட்டுபிளவு சிகிச்சைகளை முன்னெடுப்பதற்காக நிபுணர்களுடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என பிரிட்டனிற்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த குழுவினர் காலியில் இடம்பெறும் உதட்டுப்பிளவு மாநாடொன்றில் கலந்துகொள்ளவுள்ளனர். பின்னர் நுவரேலியாவில் உதட்டுப்பிளவு சிகிச்சை தொடர்பில் சத்திரகிசிச்சைநிபுணர்களுக்கு உதவஉள்ளனர்.

டேவிட் லின்சே சுகாதார இராஜாங்க அமைச்சரை சந்திக்கவுள்ளார்.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறுதாக்குதலின் போது உயிரிழந்த தனது சகோதரர்கள் அமெலி மற்றும் லின்சேயின் நினைவாக அமைப்பொன்றை டேவிட் உருவாக்கியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடைசட்டமூலம் நாட்டின் ஜனநாயகத்துக்கு எதிரான ஒன்றாகும்

## சட்டத்தரணி ஹர்ஷ நாணயக்கார போர்க்கொடி

கொழும்பு, ஏப். 04

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முகப்பு புத்தகத்தில் கருத்துக்கள் பதிவிடுவதும் பயங்கரவாத செயற்பாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளுக்கு20வருடகாலசிறை தண்டனைவிதிக்கப்படலாம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பயங்கரவாதத்துக்கு எதிரானதல்ல, ஜனநாயகத்திற்கு எதிரானது. ஆகவே இதனை ஏற்பதா இல்லையா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என சட்டத்தரணி ஹர்ஷ நாணயக்கார தெரிவித்தார்.

மக்கள்விடுதலைமுன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையின்போதே மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுமக்களின்ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளை முழுமையாக இல்லாதொழிக்கும் வகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கடந்த மாதம் 17 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது.

சிவில் அமைப்பினர், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு இந்த சட்டம் பாரிய அச்சுறுத்தலாக அமையும்.

நாட்டில் யுத்தம் என்பதொன்று தற்போது இல்லை. இருப்பினும் கடுமையான விடயங்களை உள்ளடக்கிய வகையில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

சாதாரண தண்டனை சட்டகோவையின் பிரகாரம் தண்டனை வழங்கக் கூடிய குற்றங்களைகூட இந்தசட்டத்தில்பயங்கரவாதசெயற்பாடாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக எழும் மக்கள் போராட்டத்தை முடக்குவதற்காகபயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைஉருவாக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது, அதனை விடுத்து பயங்கரவாத செயற்பாடுகளுக்குஎதிரானநோக்கம் ஏதும்கிடையாது. இந்தசட்டம் பயங்கரவாதத்திற்கு எதிரானதல்ல, ஜனநாயகத்திற்கு எதிரானது.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டிலும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாரதூரமானது. 'பயங்கரவாதம்' என்ற சொற்பதத்திற்கு நீண்ட வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் அந்த வரைவிலக்கணம் ஒன்றுக்கொண்டு முரண்பட்டதாக உள்ளது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேசபயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் 3(2) உறுப்புரையில் பொதுசொத்துக்களுக்குசேதம் விளைவித்தல், சட்டவிரோதமானமுறையில்ஒன்றுகூடல், தனிப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தல் மற்றும் குழுக்களில் இணைதல் என 13 விடயங்கள் பயங்கரவாத செயற்பாடாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் சிறந்தது தானே என ஒரு தரப்பினர் குறிப்பிட முடியும். நடைமுறையில்உள்ளதண்டனை சட்டக்கோவையின் பிரகாரம் இந்த விடயங்களுக்கு தண்டனை வழங்க முடியும், பயங்கரவாத செயற்பாடாக அடையாளப்படுத்தவேண்டிய தேவை இல்லை.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கர வாத எதிர்ப்பு சட்டமூலம் கடந்த காலங்களில் சட்டமாக்கப் பட்டிருந்தால்அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் பயங்கரவாதிகளாக சித்திரிக்கப் பட்டிருப்பார்கள், ஆகவேபயங்கரவாத எதிர்ப்புதடைச்சட்டம் என்பதுவிசம்கலந்தஜஸ்கிறீம் என்று குறிப்பிட வேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முகப் புத்தகத்தில் கருத்துக்கள் பதிவிடுவதும் பயங்கரவாத செயற்பாடாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளுக்கு 20 வருடகால சிறைத்தண்டனைவிதிக்கப்படலாம், ஆகவே ஜனநாயகத் திற்கு எதிரான பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டத்தை ஏற்பதா இல்லையா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். - என்றார்.

# அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்களில் விசேட சோதனை

குறைக்கப்பட்ட பஸ் கட்டணத்தை காட்சிப்படுத்தாமல் பயணிகளிடம் அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்களை சோதனை செய்யும் வேலைத்திட்டம் மேல்மாகாணத்தில் நேற்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகியுள்ளது.

பஸ் கட்டணப் பதிவேட்டை பயணிகள் முன்னிலையில் காட்சிப்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மேல்மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி எரிபொருள் விலை குறைக்கப்பட்ட நிலையில், கடந்த 31 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணங்கள் திருத்தப்பட்டன.

பின்னர் பிரதேச செயலகத்தால் திருத்தப்பட்ட ஆவணம் பஸ் உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மொரட்டுவை, சயுருபுர அடுக்குமாடி குடியிருப்பின் 3 ஆவது மாடியில் இருந்து வீழ்ந்து ஒருவர் சாவு!

கொழும்பு, ஏப். 04

மொரட்டுவை, சயுருபுர அடுக்குமாடி குடியிருப்பின் மூன்றாவது மாடியிலிருந்து தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக அங்குலான பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சயுருபுர வீட்டுத் தொகுதியின் மூன்றாவது மாடியில் வசித்து வந்த ரசிக சம்பத் மார்ட்டின் (வயது - 24) என்ற மீனவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.




# அமைச்சுப் பதவி கேட்டு அலைபவன் நான் அல்ல

## இப்படி எஸ்.பி. கூறுகின்றார்



நான் பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்தவன். எனவே, அமைச்சுப் பதவி கேட்டு அலைய வேண்டிய தேவை எனக்கு இல்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கட்சித் தலைமையகத்தில்நேற்றுநடைபெற்றஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டியது கட்டாயமாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நாமல் ராஜபக்ஷ வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் நீக்கம்

இலங்கை ரக்பி நிறுவனத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தி முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறதற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் தீர்மானித்துள்ளார் என சட்டமா அதிபர் நேற்று (திங்கட்கிழமை) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

மேற்படி தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி இலங்கை ரக்பி நிறுவனமும் அதன் தலைவர் ரிஸ்லி எலியாஸும் தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, இந்த மனு தொடர்பாக எடுக்க வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகத் தெரிவிக்கும் வகையில், மனுவை இம்மாதம் 6 ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# வெளிநாட்டு ஊழியர்களுக்கு கட்டண சலுகை அதிகரிப்பு

வெளிநாட்டு ஊழியர்களுக்கு விமான நிலையத்தில் வழங்கப்படும் கட்டணச் சலுகையை அதிகரிப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானம் மே மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அனுப்பிய பணத்தின் அடிப்படையில் மேலதிக கடமைக்கான சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# புத்தாண்டு சுபநேரப் பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

தமிழ், சிங்களபுத்தாண்டு சுபநேரப் பத்திரம் பாரம்பரிய மற்றும் சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

பாரம்பரிய முறைப்படி மேளதாளத்துடன் கொண்டுவரப்பட்ட சுபநேரப் பத்திரத்தை, புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கஜனாதிபதிக்குவழங்கி வைத்தார்.

வளர்பிறை தரிசனம், பழைய ஆண்டுக்கான நீராடல், புத்தாண்டுப் பிறப்பு, புண்ணியகாலம், உணவு சமைத்தல், சுப காரியங்களை ஆரம்பித்தல் கைவிசேடம் பெறுதல், உணவு உண்ணுதல், தலைக்கு மருத்துநீர் வைத்தல், தொழிலுக்காக புறப்படுதல், மரம் நடுதல் போன்ற சுபநேரங்கள்இதில்அடங்கும்.

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, மேலதிக செயலாளர் திலக் நந்தனஹெட்டியாரச்சி, பணிப்பாளர் (ஊக்குவிப்பு) கலாநிதி பிரசாத் ரணசிங்க, கலாசார அலுவல்கள் பணிப்பாளர் பாக்யா சி. கட்டுதெனிய உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# 8 மோட்டார் சைக்கிள்களை சூட்சுமமாக திருடியவர் கைது

மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்யும் போர்வையில் சென்று சுமார் 50லட்சம்ரூபாபெறுமதியான 8 மோட்டார் சைக்கிள்களை சூட்சுமமான முறையில் திருடிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக மேல்மாகாண தெற்கு மாவட்ட குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் இந்த மோசடிக்கு பயன்படுத்திய இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் நான்கு சிம் அட்டைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள் விற்பனைக்காக இணையத்தில் விளம்பரம் செய்யப்பட்ட இடங்களை தேடி மோட்டார் சைக்கிளை பரீட்சிக்கும் போர்வையில் இந் தத் திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

The Family Members and Department of Biochemistry Cordially Invites

Dear Prof. / Dr. /Mr. / Ms. ........................................................................ to the

Memorial Lecture of

***Prof. Sandrasegarampillai Balakumar***

Professor in Biochemistry,
Former Dean, Faculty of Medicine,
Former Head, Department of Biochemistry.



## VENOM AND KIDNEY DISEASES

By

**Professor Ariaranee Gnanathasan**

MBBS, MD (Col), MPhil (Col), MRCP (UK), FRCP (Lon)
Senior Professor in Medicine,
Department of Clinical Medicine,
University of Colombo.

On Monday, **10th April 2023, at 03.00 PM**
At **Hoover Auditorium,**
Faculty of Medicine,
University of Jaffna.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.04.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 20 திங்கட்கிழமை 03.04.2023 கதிர் 17

## உரத் தடையினால் 2021இல் நெல் விளைச்சல் 53% வீழ்ச்சி

2021 ஆம் ஆண்டு மகா பருவத்தில் இரசாயன உரப் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக, இந்நாட்டில்நெற்பயிர்செய்கை ஒரு ஏக்கருக்கு 53 வீதத்தால் குறைந்துள்ளதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாயப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில்தெரியவந்துள்ளது.

இரசாயன உரங்கள் மீதான தடையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த இந்த ஆய்வு 2022ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டிலும், 2023ஆம் ஆண்டின் முதல் மாதத்திலும் நடத்தப்பட்டுள்ளது. இரசாயனஉரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால் 2

## திகாம்பரமும் போர்க்கொடி



புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒருபோதும் ஆதரவு வழங்காது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனையில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்குச்சம்பள உயர் வழங்கப்பட்டு ஈராண்டுகள் கடந்துவிட்டன. எனவே, பெருந்தோட்டத்தொழிலாளர்களின்சம்பள விடயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில்தற்போதுஅத்தியாவசியப்பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். – என்றார்.

## பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்

# சுருக்குவலை தொழிலை தடுக்க வலியுறுத்தி இன்று வீதி மறியல்



### வடமராட்சி மீனவர்கள் போராட்டம்

### பொலிஸ் வாக்குறுதியை அடுத்து தற்காலிக நிறுத்தம்

(ந.லோகதயாளன்)

சுருக்குவலைத் தொழிலைக் கட்டுப்படுத் தக் கோரி பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்ட வடமராட்சி கடற்றொழிலாளர்கள் பருத்தித்துறை வீதியை மறித்துப் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒருவார காலத்திற்குள் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் வழங்கிய வாக்குறுதியைத் தொடர்ந்து, சில மணி நேரத்தின் பின்னர் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.. 2

## கோட்டாவை விரட்டிய மக்களை சிறையில் தள்ள அரசு முயற்சி

### சஜித் பகிரங்கக் குற்றச்சாட்டு



கோட்டாபய ராஜபக்சவை விரட்ட வீதிக்கு இறங்கிய இலட்சக் கணக்கான மக்களையும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி இதனூடாக மாதக்கணக்காகச் சிறையில் அடைக்க அரசு முற்படுகின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

கடுவெல பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர்மேலும்தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பிரயோகித்து மக்களின் மனித உரிமைகளை மீறி மக்களைப்பயங்கரவாதிகளாக சித்தரிக்க 2

## அரச பங்குகளை விற்பதை எதிர்த்து

# டெலிகொம் பணியாளர்கள் இன்று கொழும்பில் பெரும் போராட்டம்

ஸ்ரீலங்கா டெலிக்கொம்மின் அரச பங்குகளை தனியாருக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் இன்று போராட்டம் நடத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா டெலிகொம்மின் ஊழியர்கள் தமது பணிகளைச் செய்யாமல் காலையிலிருந்து விலகியிருந்த நிலையில் நண்பகலளவில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் மற்றும் கண்டனப் பேரணியையும் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் ஸ்ரீலங்கா டெலிகொம்மின் பிராந்திய மற்றும் பிரதேச கட்டமைப்புக்களின் ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் போராட்டம், கோட்டை லோட்டர்ஸ் வீதியில் தொடங்கியது. அங்கிருந்து பேரணியானது ஸ்ரீலங்கா டெலிக்கொம்மின் தலைமையகத்தின் பிரதான வாயில் வரையில் வந்ததோடு அங்கு நீண்ட வரிசையில் நின்று போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச வளங்களை விற்பனை செய்யவேண்டாம் என்று அவர்கள் வலியுறுத்தியதோடு ஆட்சிக்கான வருமான வழிகள் படிப்படியாக இழக்கப்படப் போகின்றன என்றும் எச்சரிக்கை 2

## நாளை கூடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சி மன் றங்களுக்கான தேர்தல் திகதி தொடர்பில் தீர்மானிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நாளைய தினம் மீண்டும் கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவேஇரண்டுதடவைகள்தேர்தல் திகதி மாற்றப்பட்டுள்ள நிலையில் நாளைய தினம் நடைபெறும் கூட்டத்தில் வாக்கெடுப்பினை நடத்துவதற்காக ஏலவே தீர்மானிக்கப்பட்ட ஏப்ரல் 25ஆம் திகதி மாற்றப்படவுள்ளதாக உள் ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2

## உழைக்காமலே வாழும் கூட்டமே ராஜபக்ச அணி



### ரணில் பாதுகாக்கின்றார் என்று இராதா குற்றச்சாட்டு

இலங்கையில் உழைக்காமலே வாழுகின்ற ஒரு கூட்டமே மஹிந்த ராஜபக்சவின் கூட்டமாகும்.

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானவேலுசாமிஇராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனையில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எமது நாட்டுப் பொருளாதாரத்தை நாமசமாக்கிய ராஜபக்சக்களை மக்கள் விரட்டினார்கள். 2



## ஆயிரம் ரூபாவால் லிட்ரோ காஸ் விலை அதிரடிக் குறைப்பு

லிட்ரோ சமையல் எரிவாயு விலை, நாளை செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்படவுள்ளது என்று அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

விலை சூத்திரத்துக்கமைய, இந்த விலைக்குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயுகொள்கலனின்விலை சுமார் ஆயிரம் ரூபாவால் குறைக்கப்படும் என்றும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

## மலையக எம்.பியை காணோம் விளையாட்டு



மலையகத்தைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் காணாமல் போய்விட்டார் எனக் கூறி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

அவசர பொலிஸ் பிரிவான 119 இற்கு அழைப்பை ஏற்படுத்தியே, முட்டாள்கள் தினமான ஏப்ரல் முதலாம் திகதி இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் இன்று அறிவித்துள்ளனர்.

அன்றைய தினம் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கொழும்பில் இருந்துள்ளார்.

இவ்வாறு முறைப்பாடு செய்த நபர் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்திய போது, அவர் சம்பந்தப்பட்ட எம்.பிக்கு நெருக்கமானவர் என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை, குறித்த எம்.பி. கடந்த காலங்களில் கட்சி தாவலில் மன்னர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் அவசர பிரிவுக்கு அழைப்பை ஏற்படுத்தி போலித் தகவல்களை வழங்குவதும், முறையற்ற விதத்தில் நடந்துகொள்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறான முயற்சிகளில் எவரும் ஈடுபட வேண்டாம் – என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# 14 வருடங்களாகச் சிறை வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

### குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படாத நிலையில்







சிறைச்சாலையில் 14 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 தமிழ் அரசியல் கைதிகள் வவுனியா மேல் நீதிமன்றத்தால் இன்று திங்கட்கிழமை விக்கப்பட்டனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் இருந்த யாழ். வேலணையைச் சேர்ந்த இ.திருவருள், யாழ். கரவெட்டியைச் சேர்ந்த ம.சுலக்சன், முள்ளியவளையைச் சேர்ந்த க.தர்சன் ஆகிய மூவருக்கும் எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத நிலையில், குறித்து மூவரையும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் விடுவித்து, அவர்களை விடுதலை செய்தார்.

இது தொடர்பாக குறித்த மூன்று அரசியல் கைதிகள் தொடர்பிலும் மன்றில் ஆஜராகி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்த சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெரிவித்ததாவது:

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து விளக்கமறியலிலும், தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டிருந்த இ.திருவருள் (வயது 45), ம.சுலக்சன் (வயது 34), க.தர்சன் (வயது 33) ஆகியோர் வவுனியா மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அர சுக்கு எதிராகச் 2

## 2 குடும்பஸ்தர்கள் கொடூரக் கொலை

இருவேறு இடங்களில் இரண்டு குடும்பஸ்தர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தட்டுவன பகுதியில் குடும்பஸ்த ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் எனத் தெரிய– வந்துள்ளது

தற்காலிகமாக தங்கியிருந்த வீட்டின் உரிமையாளருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர், கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இராஜகிரிய – பண்டாரநாயக்கபுர 2

## டெலிகொம்...

, (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுத்தனர். ஆர்ப்பாட்டத்தைக் கண்காணிக்கப் பெருமளவில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த தோடு, கலகமடக்கும் பொலிஸாரும், நீர்த்தாரைத் தாக்குதல் வகனங்களும் வருவிக்கப்பட்டிருந்தன.

இதேநேரம், ஸ்ரீலங்கா டெலிக்கொம் உட்பட 13 நிறுவனங்களில் காணப்படும் அரச பங்குகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா டெலிக்கொம்மில், அரசின் பங்குகள் 49.5சதவீதம் காணப்படுகின்றன. அவற்றை விற்பனை செய்வதற்கு எடுக்கப் படும் நடவடிக்கையையே பணியாளர்கள் எதிர்க்கின்றனர்.

## 14 வருடங்...

, (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சதித் திட்டம் தீட்டிய குற்றம் இவர்களுக்கு எதிராகச் சாட்டப்பட்டிருந்தது. இவர்கள் ஏற்கனவே வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்மானித்தது. அதனைத் தொடர்ந்து சுயாதீன சாட்சிகள் இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன. அந்தச் சாட்சியங்கள் இவர்களது குற்றத்தை நிரூப்பதற்கு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக அனைத்துக் குற்றங்களிலும் இருந்து இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மிகநீண்டகாலம் இருந்த அரசியல்கைதிகளின் வழக்காக இது காணப்படுகின்றது. உண்மையில் இவர்களது விடுதலை எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது – என்றார்.

விடுதலை செய்யப்பட்ட மூவரும் நீதிமன்றம் முன்பாக வருகை தந்திருந்த தமது குடும்பத்தினரையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்றஉறுப்பினருமானசெல்வராசா கஜேந்திரனையும் கட்டியணைந்துத் தமது மகிழ்ச்சியையும், சந்தோசத்தையும் வெளிப்படுத்தியதுடன் தமது விடுதலைக்காக உழைத்த அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்தனர்.

## 2 குடும்பஸ்தர்...

, (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்றில் நபர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் பொல்லால் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் கழுத்து நெரித்துப் படுகொலை செய்யப்பட்டுத் தூக்கில் தொங்கவிடப்பட்டுள்ளார் என்று பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் கொத்தடுவ பொலிஸார், கொலையைச் செய்த சந்தேகநபர்களைத் தேடி வருகின்றனர்.

## உழைக்காமலேயே...

, (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆனால், அவர்களைக் காப்பாற்ற பரமாத்மா போல் ரணில் விக்கிரமசிங்க வந்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சிக் காலத்தில் நல்லவராக இருந்தார். இந்த ஆட்சியில் அவர் மோசமானவராக உருவெடுத்துள்ளார்.

நாட்டில் யுத்தம் இடம்பெற்ற போது, தமிழர்களை அடக்குவதற்குக் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம்தான் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம். அந்தக் காலத்தில் சிங்களவர்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது.

இன்று அந்தச் சட்டம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக அரசால் மாற்றப்படவுள்ளது. இந்தப் புதிய சட்டத்தின் ஊடாக ஒரு நபர் கைது செய்யப்பட்டால் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி முழுமையாக எதிர்க்கின்றது. – என்றார்.

## உரத் தடையினால்...

, (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்காச்சோளம் 68 சதவீதமும், வெங்காயம் 52 சதவீதமும், உருளைக்கிழங்கு 52 சதவீதமும், மிளகாய் 43 சதவீதமும் விளைச்சல் குறைந்துள்ளதாக ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

மரக்கறிச் செய்கை 57 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், மலர்ச் செய்கையாளர்கள் சுமார் 86 வீதமான பயிர்ச்செய்கையைக் கைவிட்டுவிட்டனர் என்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு முயற்சிக்கின்றது. அதேவேளை, தொழிற் சங்கத்தினரையும், மாணவர் போராட்டக்காரர்களையும் பயங்கரவாதிகளாக அரசு அடையாளப்படுத்துகின்றது.

அரசின் இந்தச் சதி நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும். ஏலத்துக்கு விலை போகும் உறுப்பினர்கள் எம்மிடம் இல்லை. எதிர்க்கட் சியிலிருந்து அரசுக்குச் செல்வதற்குப் பதிலாக அரசிலிருந்து எதிர்க்கட்சிக்கு வருவ தற்கே பலர் காத்திருக்கின்றனர்.

கட்சி தாவல் செய்தி கேட்டு முன்னைய எதிர்க்கட்சித் தலைவர்கள் தமது உறுப்பினர்களைப் பாது காத்துக்கொள்ள சிங்கப்பூருக்கு அனுப்பியது போன்று எமக்கு அத்தகைய தேவைப்பாடு இல்லை – என்றார்.

# எழுத்தாளர் கவிச் சுடர் சிவரமணியின் ‘நவீன சீதை’ சிறுகதைநூல் அறிமுகம்












எழுத்தாளர் கவிச்சுடர் சிவரமணியின் 'நவீன சீதை' என்ற சிறுகதை நூல் அறிமுக விழா கடந்த சனிக்கிழமை 'யாழ் களரி' அரங்கில் மாலை 4.30 மணியளவில் கலைக்குரல் ஜோர்ஜ் ஜெஸ்ரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, பண்பலை வேந்தன் முகுந்தன் சுந்தரலிங்கம் அறிமுக உரையை நிகழ்த்தினார். எழுத்தாளர் செ. யோசப் பாலா சிறப்புரை வழங்கினார். யாழ் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் முருகையா சதீஸ் நூல் நயவுரை நிகழ்த்த, தமிழ்நாடு பட்டிமன்ற நடுவரும் பல்கலைக் கலைஞருமான நெல்லை.பி.சுப்பையாவிடமிருந்து நெய்தல் நிலமகன் க.திருவம்பலம் முதற்பிரதி பெற்றார்.

# சீனியில் கலப்படம் அவதானம் தேவை

## அசேல சம்பத் எச்சரிக்கை

பல்பொருள் அங்காடிகளில் சீனி வகைகளில் கலப்படம் செய்யப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிகப்பு சீனியுடன் வெள்ளை சினி கலக்கப்படுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வர்த்தக விவகார அமைச்சர் கவனம் செலுத்த வேண்டுமென கோரியுள்ளார்.

ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் விலை 220 ரூபா எனவும், சிகப்பு சீனி ஒரு கிலோகிராமின் விலை 360 ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளை சீனியுடன் சிகப்பு சீனியை கலந்து கூடிய விலைக்கு சிகப்பு சீனி என விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிகப்பு சீனியை கொள்வனவு செய்ய மக்கள் நாட்டம் காட்டுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

பல்பொருள் அங்காடிகளில் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றால், ஒவ்வொரு பல்பொருள் அங்காடிக்கு எதிரிலும் போராட்டம் நடத்த நேரிடும் என அசேல சம்பத் தெரிவித்துள்ளார்

# இலவச யோகா வகுப்புக்கள்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் அறுபது மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் ஆண், பெண் இருபாலாருக்குமான இலவச யோகாசனப் பயிற்சிகள் விரைவில் ஆரம்பமாக உள்ளது.

கிழமை நாட்களில் ஒரு பிரிவாகவும், வார இறுதி நாட்களில் மற்றொரு பிரிவாகவும் மாலை-05 மணி தொடக்கம் மாலை-06.30 மணி வரை இலவசமாக மூன்று மாதங்களுக்குத் தொடர்ச்சியாக யோகாசனப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது. பயிற்சியின் முடிவில் பெறுமதியான சான்றிதழும் வழங்கப்படும்.

எனவே, யோகாசனப் பயிற்சிகள் பெற விரும்பும் ஆர்வம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் நேரடியாகவோ அல்லது 0212215054, 0760503863 மற்றும் 0706899651 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலமோ பதிவுகளை மேற்கொள்ள முடியும் என வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

## சுருக்கு வலை..

, (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சட்டத்திற்கு புறம்பான சுருக்கு வலைத் தொழிலில் ஈடுபடும் கடற்றொழில்களை தடுத்து நிறுத்துமாறு கோரியே இப்போராட்டம் வடமராட்சி வடக்கின் 14 கடற்றொழிலாளர்கள் சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு இடம்பெற்ற போராட்டத்தின்போது ஊழியர்கள் எவரும் கடமைக்கு உள்ளே செல்லமுடியாதவாறு பிரதேச செயலக வாயில்கள் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் அப்போது வாக்குறுதியளித்தனர்.

அதையடுத்து போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. நிலையில் பிரதேச செயலக செயற்பாடுகள் பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து என்பன இயல்பு நிலைக்கு திரும்பியது.

இதற்குத் தீர்வு கிடைக்கவில்லையெனின் மாகாணம் தழுவிய போராட்டத்தை





காங்கேசன்துறை தொடக்கம் பருத்தித்துனை வரையான கடல் பிரதேசத்தில் வெளிச்சம் பாச்சி சுருக்குவலைத் தொழில் இடம்பெறுவதனால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது நாங்கள் 1 500ற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் பாரம்பரிய முறையில் அப் பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபடுகின்றோம். ஆனால் இந்தப் பகுதியில் சுருக்கு வலை சட்டத்தை மீறி தொழில் செய்வோர் சிறிய மீன்களையும் பிடிப்பதனால் எமது வாழ்வாதாரமும் எதிர்கால வளமும் பாதிக்கப்படுகின்றது.

இந்தச்சட்டவிரோதசுருக்குவலைத் தொழிலை நிறுத்தி எமது பகுதி கடற்றொழில் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை பெறவும் எதிர்காலத்திலும் தொழில் இடம்பெறும் உறுதிப்பாட்டினை வழங்கி எமக்கான வழியை காட்டுமாறும் 50 முதலாளிகளால் 1,500ற்கும் மேறபட்ட குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொள்வதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கவும். எமது வாழ்வாதாரத்தை துறைசார்ந்தோர் கண்டுகொள்ளாத நிலை தொடர்கின்றது. அத்தோடு 1996, 2017, 2018 கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தை முழுமையாக அமுல செய்ய வேண்டும் எனவும் இதன் மூலம் வடபகுதி கடலையும் சூழலையும் பாதுகாக்க தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் நாம் இதனைச் சமர்ப்பிக்கின்றோம் – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறிக்கப்பட்டு போராட்டகாரர்கள் அமர்ந்திருந்தார்கள். அதற்கு முன்னதாக அவர்கள் பிரதேச செயலகத்தின் முன்பாக வீதியையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதனால் அந்த வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது.

பிரதேச செயலர் மற்றும் பருத்தித்துறை பொலீசார் போராட்டகாரர்களை சமரசம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடற்படையினருடன் கலந்துரையாடி ஒரு வாரத்திற்குள் சுருக்கு வலை உட்பட்ட சட்ட விரோத கடற்றொழில்கள் அனைத்தையும் மேற்க்கொள்வோம் என கடற்றொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படை, பொலிஸார் இணைந்த கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யுமாறும் அதன் போது கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு பிரச்சினைகளை பேசித் தீர்க்கவும் வலியுறுத்தப் பட்டது.

போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு ஓர் மனுவையும் அனுப்பி வைத்தனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:



# புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை விமர்சிப்பவர்கள் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளவர்களே ஆவர்

## நீதியமைச்சர் விஜயதாஸ இப்படிக் கருத்து



எதிர்காலத்தில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளவர்களே உத்தேச பயங்கரவாத தடைச் சட்டமூலத்தைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

மனித உரிமைகளுக்கு எதிரான ஏற்புகள் காணப்படுமாயின், நாட்டு மக்கள் எவரும் உயர் நீதிமன்றத்தை நாடலாம். சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொடுப்போம் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (ஞாயிற் றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

பயங்கரவாதச் செயற்பாடுகளில் எவரும் ஈடுபடாவிட்டால், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கண்டு அச்சமடையத் தேவையில்லை. எதிர்காலத்தில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளவர்களே தற்போது கலக்கமடைந்துள்ளார்கள். இதன் காரணமாகவே எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

சிறு குற்றங்களில் ஈடுபடும் சந்தேக நபர்களை சிறைக்கு அனுப்பாமல், உரிய பாதுகாப்பு தரப்பினர் ஊடாக அவர்களைக் கண்காணிக்கும் வகையில் சட்டத்தை திருத்தம் செய்ய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறு குற்றங்களுக்காக சிறை செல்பவர்கள் சிறையில் இருந்து வெளியில் வரும்போது பாரதூரமான குற்றச் செயற்பாடுகளில் ஈடுபடும் நபராக மாறிவிடுகிறார்கள்.

இந்நிலையை மாற்றியமைப்பதற்காகவே சட்டத்தை மறுசீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உத்தேச பயங்கரவாத தடைச் சட்டமூலம் ஏப்ரல் மாதத்துக்குள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் உள்ளது.

பயங்கரவாதம் எப்போது தோற்றம் பெறும், எப்போது வெளிப்படும் என்பதை சோதிடத்தால் கணிக்க முடியாது. நாட்டின் தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் உருவாக்கப்படும்.

ஒன்றில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது நாடு சீரழியட்டும் என்று எண்ணிக்கொண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்ய வேண்டும். இவ்விரண்டில் ஒன்றைத் தீர்மானிக்க வேண்டும். பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை மறுசீரமைக்கும் யோசனைகளை எதிர்தரப்பினர் முன்வைத்தால் அதனை மீளாய்வு செய்வோம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை புலம்பெயர் அமைப்புக்களும், அரசாங்கமும் தீர்மானிக்க முடியாது. உயர் நீதிமன்றத்துக்கே அந்த அதிகாரம் உண்டு. ஆகவே, தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான விடயங்களை உள்ளடக்கியுள்ளது என சவாலுக்குட்படுத்தி நாட்டு மக்கள் எவரும் உயர் நீதிமன்றத்தை நாட முடியும். அதற்காக சட்டத்தரணிகளை அணுகுவதற்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்போம். – என்றார்.

# ஜனநாயகத்தை பாதுகாக்க மக்கள் ஒன்று திரளவேண்டும்

## அழைக்கின்றார் முஜிபூர் ரஹ்மான்



அரசாங்கத்தின் சர்வாதிகார செயற்பாடுகளால் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமை கேலிக்கூத்தாககப்பட்டுள்ளது. ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுதிரள வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டிலுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனத்தன்மையை இழந்துள்ளன. இதனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அதிகாரமம் ஓங்கியுள்ளது என்பதை நாட்டுமக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

குறிப்பாக தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை முற்று முழுதாக ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தால் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நீதிமன்றத்தில் வரவு – செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும் அமைச்சின் செயலாளரால் நிதி விடுவிக்கப்படவில்லை.

இது தொடர்பான நீதிமன்றத்தின் உத்தரவை புறந்தள்ளி அரசாங்கத்தின் நிபந்தனைக்கு ஏற்ப செயலாளர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இது தொடர்பில் அவர் உயர்நீதிமன்றத்தில் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும். இதன் ஊடாக அவர் தண்டிக்கப்படும் வாய்ப்புகளும் அதிகமாகவே இருக்கின்றன.

இருப்பினும் குறித்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெற்றால் அரசாங்கத்தினதும் ஜனாதிபதியின் கட்சிகளும் தோல்வியடையும் என்பதை அறிந்து தேர்தலை பிற்போடுவதற்கான சதித்திட்டங்கள் மேற் கொள்ளப் படுகின்றன. குறிப்பாக நாடு பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டெழுந்த பின் தேர்தலை நடத்துவோம் என்கின்றனர். இது வேடிக்கையான தர்க்கமாக இருக்கிறது.

1977 ஆம் ஆண்டு நாட்டில் பொருளாதார நெருக்கடி கடுமையாக இருந்தபோதிலும் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டது. அன்று தேர்தலொன்றுக்கு முகம் கொடுக்க முடியமாக இருந்தால் ஏன் தற்போது தேர்தலை நடத்த முடியாமல் இருக்கிறது.

தேர்தல் ஏன் ஒத்தி வைக்கப்படுகிறது என்பதை மக்களுக்கு இலகுவாக புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். இதேவேளை இன்று அரசாங்கத்தால் ஜனநாயகமும் மக்க ளின் வாக்குரிமையும் கேலிக்கூத்தாக்கப்படுகின்றன.

எதுஎவ்வாறிருப்பினும், நிச்சயமாக நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே பெரும்பாலானோரின் நிலைப்பாடாகும்.

இந்நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஏனைய எதிக்கட்சிகளும் சிவில் அமைப்புகளும் அரசாங்கத்திற்கு எதிராக ஒன்றுபட்டு போராடுவதில் பின் நிற்கின்றோம்.

இதன் காராணமாகத்தான் அரசாங்கம் பலமாக இருக்கிறது. எனவே நாம் ஒன்றுபட்டு செயற்படுவோமானால் தேர்தலை வெற்றிகொள்ள முடியும். நாட்டின் ஜனநாயகத்தை உறுதி செய்ய முடியும். எனவே அனைத்து தரப்பினரும் ஒன்றுதிரள வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கள் செய்யப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் ஜனநாயகத்தைப் பாதுகாக்க சரியான தீர்மானங்களை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. – என்றார்.

# இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கை நெறி கட்டணங்கள் அதிகரிப்பு

## மாணவர்கள் சங்கம் விசனம்






இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளுக்கான கட்டணம் 55 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் சங்கத் தலைவர் முஹம்மது றிபாத், இதற்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் வீதியில் இறங்கி போராடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

பல்கலைக்கழகங்களுக்குள் இன்று நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. பாடநெறிகளின் கட்டணங்கள் படிப்படியாக அதிகரித்து, மூன்று வருட காலத்துக்குரிய பாடங்கள் தற்போது இரண்டு வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், எவ்வித வசதிகளுமின்றி மாணவர்கள் பட்டப்படிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

நூற்றுக்கு 55 வீதம் கட்டணம் அதிகரித்துள்ளது. பல்கலைக்கழக நிபந்தனைகளுக்கு அப்பால் இந் தக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் கல்வியைத் தொடரும் மாண வர்கள் கற்றல் நடவடிக்கைகளை இடைநடுவில் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கு 10 வீதம் கட்டணத்தை நிறுத்துவதாக 2014 ஆம் ஆண்டு அரசாங்கம் வாக்குறுதியளித்தது. ஆனால், இன்று அது தொடர்பில் கதையில்லை. பல்கலைக்கழக கற்கைகளுக்கு 55 வீத கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு பெற்றுதர வேண்டும். இவற்றுக்கு தீர்வு கிடைக்காவிட் டால் வீதியில் இறங்கி நாமே போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் கூறியுள்ளார்.

# நாட்டில் போராட்டங்களில் ஈடுபடும் அனைவரும் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்படுவர்

## முறியடிப்போம் என்கிறார் ரஞ்சித் மத்தும பண்டார

அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடும் சகலரையும் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும் வகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை இயற்ற அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அரசாங்கத்தின் நோக்கத்தை நீதிமன்றத்தின் ஊடாக முறியடிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

உத்தேச பயங்கரவாத தடைச் சட்டமூலம் தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத தடைச் சட்டமூலத்தில் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த விடயமும் உள்ளடக்கப்படவில்லை என நீதியமைச்சர் குறிப்பிடுகிறார்.

இந்த சட்டமூலத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தியதன் பின்னரே உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை காட்டிலும் பயங்கரவாத ஏற்பாடு களை உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கொண்டுள்ளது.

பயங்கரவாதம் என்ற பதத்துக்கு அரசாங்கம் நீண்ட விளக்கத்தை அளித்து, அதில் மக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடைய பல விடயங் கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனநாயகத்துக்கு எதிரான அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபடும் சகலரையும் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும் வகையில் புதிய பயங்கரவாத தடைச்சட்டம் உருவாக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தின் நோக்கத்தை நீதிமன்றத்தின் ஊடாக முறியடிப்போம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் தன்னிச்சையாக செயற்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நிதி விடுவிக்குமாறு உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடை உத்தரவை மதிக்காமல் நிறைவேற்றுத் துறை செயற்படுகிறது.

நீதிமன்றத்தின் உத்தரவைப் புறக்கணித்து நிறைவேற்றுத் துறையின் ஆலோசனைக்கு அமைய செயற்படும் அரச அதிகாரிகள் எதிர்காலத்தில் நிச்சயம் பதிலளிக்க வேண்டும். – என்றார்.

# தீர்வை வழங்கினால் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை உடன் ஆரம்பிப்போம்

## பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்க சம்மேளனம் கிடுகுப்பிடி

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை தாமதமாவதன் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் முறையான தீர்வொன்றை வழங்குமாக இருந்தால் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை உடனடியாக ஆரம்பிப்போம் என பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம பன்னெஹெக தெரிவித்தார்.

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை தொடர்ந்து பிற்போடப்பட்டு வருகின்றமை தொடர்பாக பல்கலைக்கழக பேராசிரியர்களின் சங்க சம்மேளனம் மேற்கொண்டுள்ள தீர்மானம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசாங்கத்தின் வரிக் கொள்கை காரணமாக அநீதி ஏற்பட்டிருக்கும் எமது சங்கத்தின் உறுப்பினர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே பல்கலைக்கழக பேராசிரியர்கள் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் இருந்து விலகிக்கொள்ள தீர்மானித்தோம். வேறு எந்த கோரிக்கைகளும் இதனுடன் இணைக்கப்படவில்லை.

ஆனால், தற்போது இந்தப் பிரச்சினையும் இனவாத பிரச்சினை ஒன்றையும் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

சிங்கள மொழி விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை மாத்திரம் மேற்கொள்வதில்லை, தமிழ் மொழி விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும், அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை என்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் சிங்களம், தமிழ் என்ற பேச்சு இல்லை. இந்த செயற்பாட்டில் கலந்துகொள்ளாமல் இருக்கும் அனைவரும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாத்திரமல்லர், பாடசாலை ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்வதில்லை. அதனால் இந்த நிலையை தொடர்ந்து இழுத்தடித்துச் செல்வதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர். அதனால் அரசாங்கம் இந்த விடயம் தொடர்பாக ஆரோக்கியமான தீர்மானம் ஒன்றை வழங்குமாக இருந்தால், விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை எந்த சந்தர்ப்பத்திலும் நாங்கள் ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறோம். – என்றார்.

# புகைக்குள் சிக்கி வயோதிபர் சாவு

கிளிநொச்சி – பளையில் துப்பரவு செய்யப்பட்ட காணியின் குப்பையை எரித்த 73 வயது முதியவர் ஒருவர் புகைக்குள் அகப்பட்டு மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் பளைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பெரியபளையில் இடம்பெற்றுள்ளது என்று பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த முருகேசு என்னும் முதியவர் புற்கள் நிறைந்து காணப்பட்ட காணியை நேற்றுமுன்தினம் துப்பரவு செய்து சுற்றிவர குப்பையை குவித்து எரித்துள்ளார். அங்கு எழுந்த புகைக்குள் சிக்கிய முதியவர் வெளியேற முடியாமல் வீழ்ந்துள்ளார். இரவாகியும் வீடு திரும்பாததால் அவரைத் தேடிய உறவினர்கள் நேற்றுக் காலையில் காணிக்குச் சென்று பார்த்தபோது எரிகாயங்களுடன் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

அவரது சடலத்தை மீட்ட பொலி–ஸார் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர்.

# புதுக்குடியிருப்பு விபத்தில் ஒருவர் பலி; இருவர் காயம்

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் இன்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை குழந்தை யேசு கோயில் வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டன.

இந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு, 9 ஆம் வட்டாரம் மல்லிகைத்தீவைச் சேர்ந்த கி.ஜெமில்ராஜ் (வயது – 36) என்பவரே உயிரிழந்தவராவார்.




# நாவற்குழி கிழக்கு கமக்காரர்களுக்கு இலவச உரம் நாளை



கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கைய–ாளர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை கைதடி கமநலசேவை நிலையத்தில் வைத்து இலவச ரி.எஸ்.பி உரம் வழங்கப்படவுள்ளது.

ஒரு பரப்பிற்கு 400 கிராம் என்ற அடிப்படையில் கடந்த வருடம் நெற்பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு மேற்படி உரம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

தகுதியுடைய நாவற்குழி கிழக்கு விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து இலவச உரத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டம் ஒழுங்கு காவலர்கள் பணி தவறும்போது அவர்களுக்கு எதிரான நடவடிக்கையின் அவசியம்

வடமராட்சியில் மீனவர்கள் போராட்டம், வெடுக்குநாறிமலையில் ஆதி லிங்கம் உடைக்கப்பட்டதற்கு எதிராகப் போராட்டம், குருந்தூர் மலையில் விகாரை கட்டப்பட்டதற்கு எதிராகப் போராட்டம், இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதை எதிர்த்துப் போராட்டம் என்று அண்மைக் காலமாக நடத்தப்படும் போராட்டங்கள் எல்லாம் ஒரு வகையில் சட்டம் ஒழுங்கு முறையாக நடைமுறைப்படுத்தப்படாமையால் ஏற்படும் எதிர்வினைகள் என்பதையும் கவனிக்கவேண்டும்.

சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதற்குப் பின்னால் பௌத்த சிங்கள பேரினவாதம், நாடுகளுக்கு இடையிலான உறவுகள், அமைச்சருக்கு வேண்டியவர்கள் செய்யும் தொழில் என்று பல்வேறு காரணங்கள் இருந்தாலும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவேண்டிய காவல்துறையினரும் முப்படையினரும் தமது கடமைகளைச் செவ்வனே செய்திருந்தால் இந்தப் பிரச்சினைகள் எழுந்திருக்கமாட்டா என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இலங்கையின் சீரழிவுகளுக்கு சட்டம் ஒழுங்குக் காவலர்கள் தமது கடமையை ஒழுங்காக ஆற்றாமல் இருப்பது ஒரு பெரும் காரணம். ஆனால் அது குறித்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. அவர்கள் அரசியல் அழுத்தம் காரணமாக அதனைச் செய்கிறார்கள் என்றோ, சிங்களப் பேரினவாதத்தின் காரணமாக அதனைச் செய்கிறார்கள் என்றோ கடந்துசெல்லும் நிலைதான் இருக்கின்றது.

தேர்தலுக்கான நிதியை விடுவிக்கத் தடையாக இருப்பவர் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் என்பது எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிந்தாலும், அதற்குப் பொறுப்பானவரான திறைசேரிச் செயலாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது போன்று, வடக்குக் கிழக்கில் தமது கடமையைச் செய்யத் தவறும் சட்டம் ஒழுங்கு அதிகாரிக்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்பதே அவர்கள் தொடர்ந்தும் தவறிழைப்பதற்கான காரணமும்கூட.

சிங்களப் பேரினவாதத்திற்கும், அரசியல்வாதிகளுக்குக்கும் தாம் அடிபணிந்து நடப்பதை யாரும் கேள்விக்குட்படுத்தப்போவதில்லை என்கிற துணிவே அவர்களை மீண்டும் மீண்டும் அந்தத் தவறைப் பயமின்றிச் செய்வதற்குத் தூண்டுகின்றது. அதனைத் தடுத்து நிறுத்த ஒரு பெரும் தொடர் நடவடிக்கைக்குச் செல்லவேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அரச எதிர்ப்புப் போராட்டங்களைத் தமிழ்க் கட்சிகள் மேற்கொண்டபோது அவர்களுக்கு எதிராக வழக்குகளையும் அடக்குமுறையையும் மேற்கொண்டபோது அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன அறிவித்தன. ஆனால் அந்தக் கட்சிகளும் அது தொடர்பில் பின்னர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இப்படி எந்தச் சட்டநடவடிக்கைக்கும் தாம் உள்ளாக்கப்படமாட்டார்கள் என்கிற துணிபிலேயே சட்டம் ஒழுங்குக் காவலர்கள் தமது கடமைகளை நிறைவேற்றத் தவறுகிறார்கள். அதுவே பல பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைந்துவிடுகின்றது. எனவே சட்டம் ஒழுங்கை நிறைவேற்றத் தவறும் அதிகாரிகளை வழிக்குக் கொண்டுவருதற்கான பேரியக்கம் ஒன்று அவசியமாகின்றது. அதனை ஏற்படுத்துவது தமிழர்களின் முக்கிய கடமையும் ஆகின்றது.

# எதிர்க்கட்சிக்குள் குழுவொன்று ஜனாதிபதியை ஆதரிக்க முடிவு

## அநுர குமார போட்டுத்தாக்கு



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியுடன் இணைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுவதாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் இடம்பெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர் –

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள், பணத்துக்காக தங்கள் நாடாளுமன்ற ஆசனங்களைத் தியாகம் செய்ய மாட்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தி வருகிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# பாலியல் – இனப்பெருக்க ஆரோக்கியம் குறித்து மாணவர்களுக்கு பாடபுத்தகம்

## ரோகினி குமாரி அறிவுறுத்தல்



பாடசாலை மாணவர்களுக்கான பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பான பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதற்காக, கல்வி அமைச்சுடன் இணைந்து விசேட குழுவொன்றை நியமிக்குமாறு சிறுவர்களுக்கான நாடாளுமன்ற குழாத்தின் தலைவி ரோகினி குமாரி விஜேரத்ன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற சிறுவர்களுக்கான நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அவர் அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இந்தக் குழுவின் பொறுப்புகள் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான காலக்கெடுவை அடுத்த கூட்டத்தின் போது தயாரிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் குழுவின் தலைவியான நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன கூறியுள்ளார்.

குழுவில் உரையாற்றிய கல்வி அமைச்சின் பிரதிநிதிகள், பதினாறு வயதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் குறித்துக் கற்பிப்பதற்கான பாடப்புத்தகங்கள் ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் சிறுவர்களின் மனதுக்கு ஏற்றவாறு பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் குறித்து சிறுவயதிலிருந்தே கற்பிக்க வேண்டிய அவசியம் இருப்பதால், பாடப்புத்தகங்களைத் தயாரிக்கும் பணியை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று குழு வலியுறுத்தியுள்ளது.

திட்டத்தின் முதற்கட்டமாகப் பாடப் புத்தகங்கள் அச்சிடப்படாவிட்டாலும், மாணவர்கள் இணையத்தளம் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு அளிக்கலாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பாக மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து மதத்தலைவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஊடகங்களுக்குக் கல்வி கற்பதற்கான நிகழ்ச்சிகளையும் குழு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருமணத்துக்குப் பின் குடும்பநல அலுவலர்கள் மூலம் பெண்களுக்கு வழங்கப்படும் விழிப்புணர்வின் போது, எதிர்காலத்தில் பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்து தங்கள் குழந்தைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாகவும் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் குழுவில் ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெற்றோரால் கைவிடப்படும் குழந்தைகளில் மூன்றிலொரு வீதம் 4 வயதுக்குட்பட்டவர்கள்

இலங்கையில் பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கு நான்கு வயதுக்குட்பட்ட கைக்குழந்தைகள் என்றும், மீதமுள்ளவர்கள் 4 முதல் 18 வயது வரை உள்ளவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

சில காரணங்களால் வளர்க்க விரும்பாத அல்லது வளர்க்க முடியாத மூன்று மாதங்களுக்குக் குறைவான குழந்தைகளின் பெற்றோருக்கு அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தாமல், குழந்தைகளை இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்து செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு குழந்தைகளை வைத்து செல்வதற்காக அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் மாகாண நன்னடத்தை திணைக்களங்களின் மேற்பார்வையில் 379 குழந்தை பராமரிப்பு நிலையங்களில் அறைகளை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எந்தவொரு இடத்திலும் கைவிடப்பட்ட அல்லது திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் குழந்தைகளுக்கு மாகாண நன்னடத்தை திணைக்களத்தால் தேவையான பராமரிப்பு வழங்கப்படுகிறது.

சுகாதார அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதுடன் மருத்துவமனைகளில் கைவிடப்பட்ட குழந்தைகளை கையாள்வதற்கான சட்டப்பூர்வ அதிகாரங்களை வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கு வழங்கியுள்ளது.

கைவிடப்பட்ட குழந்தைகளைத் தத்தெடுப்பது தொடர்பில் தற்போதுள்ள சட்டங்கள் எதிர்காலத்தில் தளர்த்தப்படும் என பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

# 28 கோடி ரூபா பெறுமதியான 24 கரட் தங்கம் கடத்திய நால்வர் விமானநிலையத்தில் கைது



சுமார் 28 கோடி ரூபா பெறுமதியான தங்கம் கடத்திய நான்கு பேர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவினரும், சுங்கப் பிரிவினரும் இணைந்து இந்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

சுங்கத் தீர்வையற்ற வர்த்தக நிலையமொன்றின் முகாமையாளர் 28 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை, விமான நிலையத்திலிருந்து வெளியே கொண்டு செல்ல முயற்சித்தபோது கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 11 கிலோ கிராம் எடையுடைய 24 கரட் தங்கம் நுட்பமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு விமான சேவையொன்றுக்கு சொந்தமான விமானத்தில் வந்த பயணி ஒருவர் தங்கத்தை குறித்த முகாமையாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

முகாமையாளர் கொஞ்சம் கொஞ்சமாக தங்கத்தை வெளியே எடுத்துச் செல்ல முயற்சித்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஏழு கிலோ கிராம் எடையுடைய தங்கத்துடன் விமான நிலையத்தில் வைத்து மூன்று இந்தியர்களையும் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சிங்கப்பூர் அல்லது டுபாயிலிருந்து தங்கம் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நீர்வீழ்ச்சியில் 16 வெளிநாட்டவரைக் காப்பாற்றி நீரில் மூழ்கிய இளைஞன் பரிதாபகரமாகச் சாவு



எல்ல நீர்வீழ்ச்சியில் 16 வெளிநாட்டவர்களை காப்பாற்றிய இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். கித்துல்கல பிரதேசத்தை சேர்ந்த 38 வயதுடைய அமில மதுசாங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுற்றுலா பயணிகள் நீர்வீழ்ச்சியில் இருந்து இறங்குவதற்காக முயற்சித்தபோது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. அருவியில் திடீரென வெள்ளம் பெருக்கெடுத்ததால் ஆபத்துக்குள்ளான 16 வெளிநாட்டவர்களை அமில மதுசங்க காப்பாற்றியுள்ளார். அனைவரையும் காப்பற்றிய பின்னர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மதுசாங்க உயிரிழந்தார். அவர் ஒரு குழந்தையின் தந்தை ஆவார். இந்தச் சம்பவம் அந்தப் பகுதி மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

எனினும் ஒரு குழந்தையின் தந்தையான அமில மதுசாங்க உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் அந்த பகுதி மக்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.